# சர்வதேச தமிழர்

தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம், சமாதானம் கருதி, ஒன்றிணைக்கும்
நோர்வே தமிழ்ச் சஞ்சிகை !

*SARVADESA TAMILER* *Etbl. 1994* *1999 Nr.7*
*Norges Tamilskblad for informasjon, kunnskap, kultur, fred, framgang og solidaritet!*



பாடகர்:யோகேஸ்வரன்-லண்டன்



அரங்கேறிய மாணவியருடன், நடனஆசிரியை:மாலதி-ஒஸ்லோ




கோவிலூரின் இசைத்தட்டு
வெளியீடு-ஒஸ்லோ



பின்னிஸ்தூதர்:மார்கற்றா
பவானி தயாளன்-கனடா



சிவலிங்கம்



மாமனிதர்:தொண்டமான்



எம்.எஸ்.உதயமூர்த்தி
நோர்வே



இர.ந.வீரப்பன், மலேசியா

## 6. ஆண்டுநிறைவு-சிறப்பிதழ்!

## சர்வதேசதமிழர் சந்திப்புக்களம்:

### ஆசியுரை:

சர்வதேசதமிழர் இதழை முகுந்தனூர்
யோகாஆசிரியர்:ராம்பாஸ்கர் மூலமாக
கண்டுமகிழ்ந்தோம். புலம்பெயர்ந்து
வெளிநாடுகளிடையே வாழ்ந்துவரும்,
தமிழ்பெருங்குடிமக்கள் அரசியல்,கலா
ச்சாரம்,சமயம்,ஆன்மீகம்,போன்ற துறை
களில் பெரிதும்வளர்ச்சியுற்று,குழந்தை
கள் பகுதியாகவும்,இலக்கியப்பகுதியா
கவும்,அறிவியல்பகுதிகளாகவும்,பலவா
க மலர்ந்து,சமயநெறிகளைப் பரவச்
செய்து,யாதும் ஊரே!யாவரும் கேளிர்!
எனும் புறநானூற்றுப்பாடல்களுக்கு
ஏதுவாக,இம்மலர் சிறந்து வளர்ந்து,
சிறப்பெய்த,நம் வழிபடு மூர்த்தியாம்,
அருள்தரு,ஞானமா நடராஜப்பெருமான்
திருவடிமலர்களைச் சிந்திக்கின்றோம்.
அருளாணையின் வண்ணம்,

**சுந்தரமூர்த்தித் தம்பிரான்,**
**ஆதீனகர்த்தர், திருவாவடுதுறை**
**ஆதீனம், திருவாவடுதுறை609803**

**அன்பு ஆசிரியநண்ப,**

நீண்டகாலம் தொடர்புறமுடியாமைக்கு
மன்னிக்கவும்.நான் தற்போது மன்னர்
சவுத் பல்கலைக்கழகத்தில் பௌதீகப்
பேராசிரியராகப் பணியேற்றுள்ளேன்.
சர்வதேசதமிழருடனான தொடர்புகளை
மேலும் இங்கிருந்து வலுப்படுத்தவிரும்
புகிறோம்.சர்வதேசதமிழர் தமிழகசிறப்
பிதழை வெளியிட்டதுபோல்,சவூதி சிற
ப்பிதழ் வெளியிட விரும்புகிறோம்.
இங்கு றியாட்டில் சுமார் 10000 இலங்
கை,இந்தியதமிழர்கள் உள்.தமிழ்ச்
சங்கமும் உண்டு.பலர் இங்கு பரந்து
வாழினும்,சர்வதேசதமிழருடன் ஒருவித
இணைப்பை ஏற்படுத்தமுடியும்.
தமிழகத்தில்,கவிஞர்.ஆலந்தூர்.மோக
னரங்கத்தின் மகன் பட்டழகன்,தமிழக
அமைச்சர் தமிழ்குடிமகனை கௌரவி
க்குமுகமாக தமிழகசிறப்பிதழ் வெளி
யிடவிரும்புகிறார்.தங்கள் கருத்தை
அறியதரவும்.என் துணைவியார்,3புதல்
வர்களும் நல்வாழ்த்தை தெரிவிக்கிறா
ர்கள்.எமதுபங்களிப்பு நிச்சயம் உண்டு

**பேராசிரியர். வ. மாசிலாமணி,**
Dept. of Physics,pb.2455,King Saud
Univ.,Riyadh 11451,K.S.A.
e.mail:masilamaniv@yahoo.com

(சவூதி சிறப்பிதழ்,தமிழகச்சிறப்பிதழுக்
கு உற்சாகமான வரவேற்பு உண்டு!
பணியை தொடங்குக! அது போல்
உலகில் வேறு நகர,நாட்டு,ஊர்சிறப்பி
தழ் தரவிரும்புவோர் தொடர்புறுக!ஆர்)

**அன்பு ஆசிரியநண்ப!**

உமைவாழ்த்த வார்த்தைகள் இன்றித்
தவிக்கின்றேன்.அரியபணி!பெரியபணி!!
உலகத்தமிழர்களை ஒன்றிணைக்கும்
முயற்சி தொடர்ந்து வெல்க!பக்கங்கள்
சிலவே எனினும் பக்குவமாய் தயாரிக்
கும்பணி,பாராட்டுக்குரியது!அட்டை மிக
அழகாக,படங்கள் தெளிவாக அமைகி
றது.ஆசிரியத்தலைப்பில் அவதானம்
தேவை!அரசியலை,விலக்குவது நலம்!
யாழ்.இந்துக்கல்லூரியில் எமது பள்ளி
நாட்கள் மறக்கமுடியாதவையே!சர்வ
தேசதமிழர் இதழ்களை நியூசிலாந்து
தமிழர்கள்,சுவைக்க தொடர்ந்தனுப்புக!

**தி. திருநந்தகுமார்-ஆசிரியர்**
**வெண்ணிலவு-நியூசிலாந்து**
158,Pigeon Mtn rd,Bucklands beach
Auckland,NZ,Tel.006495359797

**அன்பின் ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் 6ம்ஆண்டை நிறைவு
செய்வதையிட்டு அகமகிழ்கிறேன்.
புலம்பெயர்மண்ணில் எவ்வளவு சிரமங்
கட்கு மத்தியில் தமிழ்நூல்கள்,சஞ்சி
கைகள் அச்சேறுகின்றன!என்பதை
நான்,நன்கறிவேன்.வாழ்வது ஒருமுறை!
வாழ்த்தட்டும் தலைமுறை!!என்பதைக்
கருத்தில்கொண்டு கடமையை செய்யு
ங்கள். தமிழ் வாழ்க! தமிழர் வளர்க!!

அகிலத்தின் எந்தமூலையில் இருந்தா
லும்,தமிழர்களை தமிழர்களாக வாழ
வைக்கும்பணி மகத்தானது.சர்வதேச
தமிழர் வாழ!வளர!! வாழ்த்துக்கள்!!!

**செந்திலாதன்-தமிழன்வழிகாட்டி**
Athavan publ,371,Orton park rd,#120
Scarborough,ON,Canada M1G3V1
Tel.001.416.4389797Fax.438.6663
www.tamilsguide.com

**அன்புடையீர்,**

உ.த.ப.இயக்க வெள்ளிவிழா மாநாட்
டை ஆவணி.27-29வரை சென்னையில்
நடாத்திய இயக்கதலைவர்:இர.ந.வீரப்ப
னார், 3.9.99ல் புதுச்சேரியில் மாரடைப்
பால் 70வயதில் காலமானார்.உலக
நாடுகள் பலவற்றுக்கு விஜயம்செய்து,
அங்குள்ள,தமிழர்மொழி,கலை,பண்பாடு
வளர்ச்சிக்கு பெரிதும் உதவியவரும்,
சுமார் 20நூல்கள்,பலஆய்வுக் கட்டுரை
கள் எழுதியவருமான இவர்,பல தமிழ்
மாநாடுகள்,கருத்தரங்குகளில் கலந்து
கொண்டவர்.கடந்த 50வருடங்களாக
தமிழ்,தமிழருக்கு தொண்டாற்றிய,இவர்
நல்லுடல்,6.9.99 மலேசியாவில் தகனம்
செய்யப்பட்டது.அவரது,துணைவி,மகன்
3புதல்விகட்கும் சர்வதேசதமிழர் சார்பி
ல் எமது அனுதாபங்கள் உரித்தாகுக!

**அரங்க. முருகையன்-லண்டன்**

**அன்புடையீர்,**

தமிழறிஞர் வீரப்பனாருக்கு அஞ்சலிக்
கூட்டம்,12.9.99,தேசியநிலநிதிகூட்டுறவு
சங்கமண்டபத்தில் நடைபெற்றது.ம.த.ப
இயக்கம் இதனை ஒழுங்குசெய்தது.
8.6.30ல் இலங்கை, நுவரெலியாவில்
பிறந்தஇவர்,பெற்றோருடன் மலேசியா
வந்து,தோட்டப்பள்ளியில் தமிழ்பயின்
றார்.1951ல் திருமணம் செய்த இவர்
தமிழாசிரியராகப்பணிபுரிந்து,ஆசிரியர்
பயிற்சிகல்லூரியிலும் பயின்றார்.1954
முதல்,மலேசிய,தமிழக,சிங்கை,ஏடுகளி
ல் பலகட்டுரைகள் எழுதியதுடன்,பல
நூல்களை,எழுதினார்.1966ல்,மலேசியா
வில்,நடந்த உலகதமிழாராய்ச்சி மாநா
ட்டில் மலாய்மொழியில் தமிழின்சொற்
கள் ஆயிரமுண்டு!என கட்டுரைபடித்து
பாராட்டுப்பெற்றார்.பலநாடுகட்கும் சென்
று தமிழ்இலக்கியப்பாலம் அமைத்தார்.
உ.த.ப.இயக்கத்தை 30 நாடுகளில்
அமைத்து,60நாடுகளில் தொடர்புறவு
கள்,ஏற்படுத்தி,பண்பாட்டைவளர்த்தார்.
மார்கழி 12ல் உலகளாவிய சிலப்பதி
காரமாநாடு,கோலாலம்பூரில்,நடைபெறு
ம்.அமைச்சர்கள்:டத்தோ சாமிவேலு,
அன்பழகன்,தமிழ்குடிமகன் ஆகியோர்
வருகைதருவர்.உலகதமிழர்கள் வருக!

**மு. மணிவெள்ளையன், செயலர்**
**தமிழ்ப்பண்பகம். கோலாலம்பூர்**
198B,2.floor,Jln Tun Sambanthan,
Brickfields,50470 KL,Malaysia

**அன்பினிய ஆசிரியருக்கு,**

வணக்கம்! தங்களது சர்வதேசதமிழர்
இதழ் தவறாது படித்துவருகிறேன்.
பாராட்டத்தகு முயற்சி! எண்பதுவீதம்
குறையில்லை.எனினும் கொஞ்சம்
மெலிதான,எதிர்மறைபோக்கு இருப்பது
குறைக்கப்பட்டால் அற்புதமாயிருக்கும்.
தொடர்ந்து வளர்க! வன்னிப்பிள்ளை
கட்கு,சர்வதேசதமிழர் சார்பாக செய்த
உதவிவிபரத்தை(தமிழ்ஒளி தொலைக்
காட்சி நிதிசேகரிப்பில்)அறியத்தருக!
உரிய ரசீது அனுப்பிவைக்கலாம்.

**வண. பிதா. ஜெகத் கஸ்பர் ராஜ்**
Radio Veritas Asia,pb.2642,Quezon
city,1166 Philippines tel.9390011-14
Fax.0063.2.938.1940,
e.mail: info@radio-veritas.org.ph

(வன்னிப்பிள்ளைகள் நிதிசேகரிப்பு பற்
றிய அறிக்கை,அவைபயன்படுத்தப்பட்
ட விதம்,பயன்பெற்றபிள்ளைகள் விபர
த்தை,அனுப்புவீர்களாயின் நாம் நன்றி
யுடையோம்.அதனை உலகதமிழர்க்கு
அறியத்தரலாம்.தங்கள் சேவைக்கு
ஈழத்தமிழர் சமூகம் நன்றிகூறுகிறது!)

**அன்பின் ஆசிரியருக்கு,**

போர்!போர்!போர்! தொடர்ந்து போர்!
மக்கள்அழிவர்!பொருள்,பண்டம்சொத்து
அழியும்.தொழில்வளம்,விவசாயம் அழி
யும்!செச்னியா,பாலஸ்தீனம்,எதியோப்பி
யா,அயர்லாந்த்,அல்ஜிரியா,றுவாண்டா
என பலநாடுகள் உதாரணம்!
போர்தொடர்வதால் மதம்மாற்றிகட்கும்
அரியசந்தர்ப்பம்!சர்வதேசநிறுவனங்களி
ன் உதவியோடு மதமாற்றம்!
செல்வந்தர்,வர்த்தகர்,கல்விமான்கள்
தம்தமிழீழசொத்துகளை துச்சமாக
எண்ணி அப்படியே விட்டுவிட்டு,தென்
னிலங்கையிலும்,வெளிநாட்டிலும் வாழ்
கிறார்கள்.மக்கள் இடம்பெயர்வு ஒரு
மாயை!பண்பாடு,மதம்,மொழி அழிவதற்
கு ஒருவழி! முன்பு தமிழகத்தில்
களப்பிரர் ஆட்சியில் நிலவிய போர்க்
காலச்சூழலில்,சமணரும்,புத்தரும் தம்
சமயங்களை தமிழர்மீது திணித்தமை
வரலாறு!அதேபோல் இன்றைய போர்க்
கால சூழலைப்பயன்படுத்தி சைவத்
தமிழ்விரோதிகள் புறமதங்களை நம்
மீது திணிப்பதை வன்மையாகக்கண்டி
க்கிறோம்.இச்செயல்கள்,உடன் நிறுத்த
ப்படவேண்டும்!என சம்பந்தப்பட்டவர்க
ளை பணிவாக,கேட்டுக்கொள்கிறோம்!!

**க. மகேசன் - யாழ்ப்பாணம்**

**அன்புடையீர்,**

ஈழத்தமிழர்களே உலகெலாம் தமிழ்க்
கலாசாரத்தைபரப்பும் பெருமைக்குரிய
வர்கள்!என,சண்முகம் தியாகராசாவின்
வரலாற்றுத்தவறுகள்,நூல்வெளியீட்டில்
பேசிய தஞ்சை தமிழ்பல்கலைக்கழகப்
பேராசிரியர் ராஜ் பவுண்துரை,கூறினார்.
லண்டன் கிழக்கு,ஈஸ்ட்காம் பிளாசட்
பாடசாலையில் சுடரொளி வெளியீட்டு
கழக ஆதரவில் நடந்தவிழாவில் சட்ட
த்தரணி கிருஸ்ணராசா,டாக்டர்.மாணிக்
கராசா,ஈழகேசரி:ராஜகோபால்,சட்டத்தர
ணி:செல்வநாயகம்,ஐ.தி.சம்பந்தன்,இர.
தணிகாசலம்,இரா.முருகானந்தன்,அன்ன
லட்சுமி ஜெயபாகு ஆகியோர் உரை
யாற்றினர்.தி.நந்தன் நன்றிகூறினார்.

**ஐ. தி. சம்பந்தன்**-Tel.181.5526992

**அன்பான தமிழர்களே! சர்வதேசதமிழர் தொடர்ந்துவர தங்கள்**
**சந்தாஆதரவை நல்குமாறு அன்புரிமையுடன் வேண்டுகிறோம்!**

# சர்வதேசதமிழர்:1999-7

## ஆசிரியர் கருத்து:

### தமிழர்களும் தொண்டமானும்!

இலங்கையின் தோட்டத்தொழில்துறை,மற்றும் சேவைத்துறை,வர்த்தகதுறைகளில் அச்சாணியாக,விளங்கும் மலையகதமிழ்ச்சகோதரர்களின் தந்தையாக மட்டுமன்றி,இலங்கைத்தமிழர்களின் நலனிலும்,இஸ்லாமியத்தமிழர்களின் வாழ்விலும் அக்கறைகாட்டியதுடன்,சிங்களவர்களினதும் நண்பனாகவும் விளங்கி தான் ஒரு மனிதநேசன்!எனக்காட்டிய,தொண்டமான் எனும் ஆலமரம் இன்று சரிந்துவிட்டமை,நெஞ்சத்தை உருக்கிவிட்டது.அரசியலில்,சாணக்கியராகவும், ஆகாயத்தில் பறவாத,நிலத்தில்நடக்கும் எதார்த்தவாதியாகவும் அவர் இனங்காணப்பட்டார். அவரது 60ஆண்டு அரசியல்வாழ்வில்,மலையகமக்கள்-பிரசாஉரிமை போன்ற பலஅடிப்படை உரிமைகளைக்கூட போராடியே பெறவேண்டியதாயிற்று.கல்வி,குடியிருப்பு,சுகாதாரம்,மனிதஉரிமைகள்,சமூகஉரிமைகள்,அரசியல்உரிமைகள் குறித்து அவரது பயணம் இன்னமும் தொடரவேண்டியிருப்பதற்கு காரணம்,மனிதாபிமானமற்ற சிங்கள-துவேசஅரசுகளும்,சிங்கள-துவேச நிர்வாகயந்திரிகளும்,சிங்கள-துவேசபடைகளும் சிங்கள-துவேச அரசியல்வாதிகளுமே தான்! அண்மையில்,வரவிருந்த,சகலர்க்கும் சமவாய்ப் புச்சட்டம் கைவிடப்பட்டமை,சிங்களதுவேசத்துக்கு மேலும் ஒரு 2000ஆண்டு சாட்சியாகும்! அத்துடன் மலையகமக்கள்உரிமை,நிலைமை பற்றி சற்றுமே,அக்கறைகாட்டாத,கையாலாகாத, குரல்கொடாத, இந்திய-மத்தியஅரசுகளும், தமிழக-மாநிலஅரசுகளும் கூட குற்றம் சாட்டப் படவேண்டியவையே!என்பதில் சந்தேகமில்லை

30.8.1913ல் தமிழ்நாட்டின்,திருச்சி-மூனாபுதூரில் கருப்பையாபிள்ளை எனும் குமாரவேலுக்கும், சித்தம்மைக்கும் மகனாகப்பிறந்த, தொண்டமான்,1924ல் இலங்கையின் கம்பளையை வந்தடைந்தார்.1932ல் சௌமியமூர்த்தி எனும் பெயருடன் தொண்டமான் எனும் பாரம்பரிய வம்சப் பெயரையும் இணைத்துக்கொண்டார். இவரது வம்சம் குலோத்துங்கச் சோழனுக்கு தளபதியாக இருந்த கருணாகரத்தொண்டமான் வழி வந்தது எனக் கருதப்படுகிறது. 1940ல்,இலங்கை இந்தியகாங்கிரஸ் தலைவரான,தொண்டமான்,தோட்டச்சொந்தக்காரராகவிருந்தபோதும்,தொழிலாளருக்காக தன்பெரும்பொழுதை செலவிட்டார்.மகாத்மாகாந்தியின் அகிம்சைவழியில் வறியமக்களுக்காகப் போரிட்டார். சேர்.பொன்.அருணாசலத்தால் கொழும்புக்கு தேசநேசன் பத்திரிகைஆசிரியராக சென்னையிலிருந்து,அழைத்துவரப்பட்ட,தஞ்சாவூர்-பிராமணரான கே.நடேசய்யர்,இலங்கைதொழிலாளர்யூனியனில் முக்கியபங்கேற்றார்.பின் அதன் தலைவர்:ஏ.இ.குணசிங்காவின் துவேசப்போக்கினால்,பிரிந்து,அகிலஇலங்கைதோட்டதொழிலாளர் அமைப்பை கற்றனில் தொடங்கினார்.1939ல் நேரு,முன்னிலையில் பலஅமைப்புகள் ஒன்றுபட்டு,தோன்றிய இலங்கைஇந்தியகாங்கிரசில் இதுவும் இணைந்தது.இலங்கைஇந்தியகாங்கிரசின் தொழிலாளர்அமைப்பின் தலைவராக,1940ல் தொண்டமான் தெரிவானார்.1947ல் எம்.பியானார்.1954ல் இ.இ.கா.தொ.அமைப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்,எனப்பெயர் மாறியது.

1948பிரசாஉரிமைசட்டத்தால் இந்தியதமிழர் பிரசாஉரிமை இழக்க,மனம்வருந்திய இலங்கைத்தமிழர் தந்தை:செல்வாவும்,வன்னியசிங்கமும் தமிழ்காங்கிரசிலிருந்து,பிரிந்து,சமஸ்டிக் கட்சி எனும் தமிழரசுக்கட்சியை தோற்றுவித்தனர்.அதுவே பின்னர்,வட்டுக்கோட்டைமாநாட்டில் தமிழர் ஐக்கியவிடுதலைமுன்னணியை 1976ல் செல்வா-ஜீ.ஜீ-தொண்டா முன்னிலையில் தோற்றுவிக்க,அடிகோலியது.வடகிழக்குக்கு அப்பால் வாழும் மலையகமக்கள் உரிமைக்காக பாடுபட்டபோதும்,தொண்டா,ஈழத்தமிழர்மேல்,பாசமுமும்,மதிப்பும் கொண்டவராகவே இருந்தார். அதுபோல் இலங்கைதமிழர் தலைவர்களான, அருணாசலம்,செல்வா,அமிர்,பிரபா போன்றவர்களும்கூட மலையகமக்களை சகோதரர்களாகவே கருதினர்.கருதுகின்றனர்.தொண்டமானுக்கு பிரபாகரன்மேல் ஒருவாஞ்சையுண்டு.அதனால் துணிவாக 5வருடத்துக்கு ஆட்சியை அவரிடம் ஒப்படைத்துவிடுங்கள்!என கூறினார். அவரை சமாதானதுாதுவராகவும்,ஆலோசகராகவும் சந்திரிகா நம்பியிருந்தால் 3ம்நாட்டின் துணையின்றியே ஈழத்தமிழர்பிரச்சனையை தீர்த்திருக்கமுடியும்.கையில் வெண்ணெய்,இருக்க நெய்க்கு அலைந்த கதையேதான்!

1981ல் மதுரை தமிழ்மாநாட்டில் தொண்டாவை முதலில்,சந்தித்தபோது,மலையகசகோதரர்கட்கு இலங்கைதமிழர்,ஆதரவு எப்போதுமுண்டு!எனக் கூறியபோது,மனமகிழ்ந்தார் தொண்டமான்! மலையகமக்களுக்கு, அரைநூற்றாண்டுக்கு மேல்,அகிம்சைவழியில்,சேவைசெய்த தொண்டமானை,நோபல்பரிசுக்கு சிபார்சுசெய்ய முயன்றபோது,சிலரது ஒத்துழைப்பின்மையால் அந்த முயற்சி கைகூடவில்லை!என்பது கவலையே! எதிர்காலத்தில் அவரது பேரன்: ஆறுமுகம் தொண்டமான்,யோகராஜன்,தேவராஜ்,ஆகியோர் இலங்கை தொழிலாளர் காங்கிரசை பொருளாதாரரீதியாக மலையகமக்களை முன்னேற்ற ஏற்ற வழிவகைகளை சுயமானவேலைவாய்ப்பு, பொருளாதாரதிட்டங்கள்(உ.ம்:இ.தொ.வங்கி,இ.தொ.காப்புறுதி,ஏற்றுமதி-இறக்குமதி,வெளிநாட்டுவேலை,கல்விவாய்ப்பு,சுயவீடமைப்பு,அஞ்சல் கல்விசேவை)மூலம்,ஈடுபடுத்தி,செயல்பாடுகளை விரிவுபடுத்த முயலவேண்டும். அத்துடன் இலங்கைத்தமிழர்,இஸ்லாமியதமிழர் கட்சிகள், அமைப்புகளுடனும்,இந்தியவம்சாவழிபேரணியின் ஏனைய முக்கியமான அமைப்புகளுடனும் நட்புறவான சிங்கள அமைப்புகளுடனும் ஒத்துழைப்புதிட்டங்களை மேற்கொள்ளலாம்.

*Speak, as would be received by the educated and score;*
*Learn the nuances from those who have gathered more.*
Thirukkural 724

## சர்வதேசதமிழர் செய்திகள்:




### கலைச்சேவை வெள்ளிவிழாவும், இசைத்தட்டு வெளியீடும்:

கோவிலூர் செல்வராசனின் கலை-இலக்கியதுறைசேவையின் வெள்ளிவிழா பாராட்டும்,அவரது,12பாடல்கள்கொண்ட தேசத்தின்தென்றல் தாயகஉணர்வுப் பாடல்கள்-இசைத்தட்டு வெளியீடும், 16.10.99 ஒஸ்லோ தொய்யன் தேவாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாதம் வானொலியும்,தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடமும் விழாவை ஒழுங்குசெய்தன.அன்ரன்டேவிட், பொன்.சுபாஸ்சந்திரன் பொன்னாடை அணிவிக்க,திலீபன்,வரதா,வாழ்த்துப்பா அளித்தனர்.யோகேஸ்,திலீபன்,கிருபா, கார்மேகம் நந்தா,கௌரி, சர்வதேச தமிழர் ஆசிரியர்:பிரபு உட்பட பலர் வாழ்த்துரை,விமர்சனம் வழங்கினர். முதல் இசைத்தட்டை நோர்வே விவசாய பல்கலைக்கழக பேராசிரியர் (நோர்அக்றிக்)-என்.சண்முகரட்ணம் பெற்றார்.கோவிலூர் செல்வராசன் மேலும் வளர, எம் இனியபாராட்டுகள்! பாடல்களையும்,மெட்டையும் கோவிலூர் அமைத்ததுடன் சசிரேகாவுடன் சேர்ந்து பாடியுமுள்ளார்.இசை:ஜோசுவா ராஜன், வெளியீடு:செல்வ.பரமேஸ்வரி இசைத்தட்டை வாங்கவிரும்புவோர்: Frydensgt.3B,0567oslo,Tel.22678732

### தனிநாயகஅடிகள் நினைவுவிழா!

உலகெலாம் தமிழ்பரப்பிய தனிநாயக அடிகள் நினைவுவிழா,11.9.99லண்டன் ஈஸ்ட்காமில்,பிளாசற் பாடசாலையில் சட்டத்தரணி வெற்றிவேல் தலைமையில் சிறப்பாக நடந்தது.சிறப்புரை:துளசி மகேஸ்வரன்,நினைவுப்பேருரைகள்:அருட்திரு.தேவராஜன்,இராம.வீரசிங்கம்,பற்றிமாகரன்,பொன்.பாலசுந்தரம்,கவியரங்கு(தமிழ் உணர்ந்த தனிநாயகம்):நற்குணதயாளன்,இராஜமனோகரன்,அந்தனி கோபாலன்,பாலரவி,சிறப்புமலர் வெளியீடு:கைலை நாகநாதசிவம் குருக்கள், இராப்போசனம் என,விழா சிறப்புற்றது. Info.:I.T.Sampanthan,Sudaroli Publn Tel.0044181.5526992,Vetri:171.2740100,Siva.Thanikasalam:181.9916834

### கனடாவில் கலேவலா அறிமுகம்:

ஈழத்து பிரபலஎழுத்தாளர் இ.சிவலிங்கம்(உதயணன்)உரைநடையில் மொழிபெயர்த்த பின்லாந்து தேசியகாவியம் கலேவலா-வெளியீடு 4.9.99 ஸ்காபரோ நகர மண்டபத்தில், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர்: கவிஞர். வி.கந்தவனம் தலைமையில், பின்லாந்து தூதரகபிரதிநிதி:மார்கட்டா பார்தனன் பிரதம விருந்தினராக விளங்க சிறப்பாக நடந்தது. திருமதி.பவானி தயாளன் பின்னிஸ், தமிழில்,வரவேற்புரை நிகழ்த்த, தலைவர் உரையும்,ரொறன்ரோ பல்கலைக்கழகபேராசிரியர்:போர்ய வகமாகி ,கலேவலா பற்றி,உரைநிகழ்த்த,தமிழர் தகவல்-ஆசிரியர்:எஸ்.திருச்செல்வம் தமிழ் உரைநடை மொழிபெயர்ப்பைப் பற்றி விமர்சித்தார்.நூலாசிரியர்:சிவலிங்கம்,உரையின்பின்,உதயன்--ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் நன்றிகூறினார்.வெளியீடு:சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,154,டி.டி.கே.சாலை,செ-18

### முல்லைஅமுதனின் நூலறிமுகம்:

ஈழத்து எழுத்தாளர்:முல்லைஅமுதனின் சினேகம்,பட்டங்கள் சுமக்கின்றான்! நூல்அறிமுகவிழா,கிழ.லண்டன், ஈஸ்ட்காம்-ரினிட்டி சமூகநிலையத்தில் இடம்பெற்றது.பொன்.பாலசுந்தரம் தலைமையில்,பத்மநாதன்,தம்பதியர் மங்களவிளக்கேற்ற,திருவள்ளுவர் பாடசாலை-மாணவர் தமிழ்வாழ்த்து பாட,ஈழகேசரி-ராஜகோபால்,கவுன்சிலர்:போல் சத்யநாதன்,வாழ்த்துரை தர,ஜெ.அன்னலட்சுமி ஸ்ரீரங்கன் நூலை ஆய்வுசெய்ய,வித்துவான்:க.ந.வேலன் நூல்களை வெளியிட்டார்.ஆசிரியர் பதிலுரை தந்தார். பாரதி பாடலில் விஞ்சியது:ஆத்மீகமா? சமுதாயஉணர்வா?எனும் பட்டிமன்றத்துக்கு,செ.சிறீகந்தராசா தலைமை வகிக்க,சர்வநாதன்,இராஜமனோகரன், குணா வேலுப்பிள்ளை,ந.புவனேஸ்வரி. வாதிட்டனர்.(Mullai:181.4724376)

### ஜேர்மனியில் அரங்கேற்றம்:

ஈழத்து இணுவில்-கோண்டாவில்,ஞானரட்ணம் தம்பதியர்,புதல்வி:தபோவதனியின் பரதநாட்டியஅரங்கேற்றம்,25.9.99 பிரீமன்நகரில் பிரதமவிருந்தினர்: டாக்மார்லில்,சிறப்புவிருந்தினர்:வெற்றிமணி ஆசிரியர்:மு.க.சு.சிவகுமாரன்,குரு.செல்வி.ஸ்ரீரஞ்சனி குணரத்தினம் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. பாட்டு:கிருபாமணி மகாலிங்கசிவம்,மிருதங்கம்:எஸ்.பிரணவநாதன்,வயலின்:தமிழ்நாடு-ராதாகிருஸ்ணன்,தம்புரா:றெயின் முன்ட் கில்ரன் ஆவர்.

### நோர்வே,தமிழ்சங்க வாணிவிழா!

நோர்வே தமிழ்சங்க வாணிவிழாவும் பொதுக்கூட்டமும் 23.10.99 ஒஸ்லோ குறுறுட் சம்புன்குசவில் சிறப்பாக நடைபெற்றது. உமைபாலனின் சிறுவர் அரங்கத்தில் அருமையான பாடல்கள் சிறார்களால் பாடப்பட்டது.இந்துஜாவின் பியானோஇசையும், நமது வாழ்வில் இந்துசமயத்தின் பங்கு!-எனும் தலைப்பில்,சர்வதேசதமிழர்-ஆசிரியரின் சிறப்புரையும் நடைபெற்றது. தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்ட தமிழர் விடயத்தில்,தமிழ்சங்கம்,த.அ.ந.குழுவின் அக்கறை மேலும் தேவை! என சண் கருத்து தெரிவித்தார். சதா.ஆனந்தகரன் விழாவுக்கு தலைமை தாங்கியதுடன் பங்குகொண்ட சிறார்கட்கு,பரிசும்,வழங்கினார்.2000வருட-நிர்வாக,தேர்தல்குழுவும்,தெரிவானது. Tamil Sangam i Norge,pb.88 Romsås 0907 oslo Tel.S.Ananth 22.215865,

### தமிழ்அகதிகள் நடவடிக்கைகுழு

ஒஸ்லோ-ஸரொவ்னரில்,நோர்வே தமிழ் அகதிகள் நடிவடிக்கைகுழு திரு.சச்சி மயில்வாகனம் தலைமையில் கூடி,அகதிவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோரை திருப்பிஅனுப்புவதை தடுப்பதுகுறித்து 7.11.99ல்,ஆராய்ந்தது.நோவாஸ்,அம்னெஸ்ரியுடன் சோநுது,நீதிஅமைச்சரை சந்திப்பதெனவும் முடிவாயிற்று. நோர்வே வழக்கறிஞர் ஒருவர்,அங்கு திருப்பி அனுப்பட்டவர்கள்-நிலைபற்றி அறிய, இலங்கைசெல்வது,பற்றியும்கூறப்பட்டது Tamil R.A.C.: Rasadurai:22.212735

### ட்றம்மன் தமிழர்நட்புறவுகழகம்:

ட்றம்மன் தமிழர் நட்புறவுகழக வாணிவிழா, 16.10.99 பியல்பாடசாலையில் தலைவர்:சம்பந்தர்-வேதலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தேவாரம்,வாணிபாடல்களைப் பெரியர், சிறார்கள் பின்பற்றிப் பாடினார்கள். வாழ்க ஆபிரிக்கா நிகழ்ச்சி, சர்வதேச நாட்கள்கலாசாரநிகழ்வுகளில் ட்றம்மன் சிறுமிகள் நடனநிகழ்ச்சிகளை அளித்தனர்.தமிழ்இசைப்பாடல் நிகழ்ச்சியை ஆர்.சுரேசின்-தப்ளாவுடன்,என்.எஸ்.பிரபு, 23.10.99பல்கலாசாரநிகழ்வில்அளித்தார் 6.11.99 தமிழர்நட்புறவுகழக 9ம்ஆண்டு விழாவில் விளையாட்டுப்போட்டிகளில் வென்றோர்கட்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன்,கலைநிகழ்ச்சிகளும்,இராப்போசனமும் நடைபெற்றது.

### நோர்வேயில் தமிழர் கொலை!

ஒலசுண்ட்,சிக்கல்வென்னில் 35வயதான பளையைசேர்ந்த ராஜகுமாரன் ராசையா அவரது வீட்டில் வைத்து குத்திக் கொலைசெய்யப்பட்டு,பின்பு அயல் கிராமமான ஸ்ராண்டாவில் கடலுக்குள் எறியப்பட்டார்.நோர்வே பத்திரிகைகள்,தொலைக்காட்சிகளில் பரபரப்பாக பேசப்பட்டது. இறுதியில் 33வயதான ஒரு தமிழர் சந்தேகத்தின் பேரில் கைதானார்.எனினும் அவர், தான் குற்றமற்றவர்!என மறுத்துவருகிறார்


### சிவாஞ்சலி நர்த்தனாலயாவின் சான்றிதழ்-வழங்குவைபவமும், புதிய மாணவர் வித்யாரம்பமும்!

சிவாஞ்சலி நாட்டியாலயாவின் பரதநாட்டியபயிற்சியை வெற்றிகரமாக முடித்தமைக்கான பரீட்சை சான்றிதழ்கள், (மேற்குலண்டன் பரதநாட்டியகல்லூரியின் பரீட்சை) வழங்கும்வைபவம், 17.10.99 ஒஸ்லோ சிவசுப்பிரமணியர் ஆலயவிசேடபூசையின் பின் நடைபெற்றது.அத்துடன் புதியமாணவர்க்கான வித்தியாரம்பமும்,நாட்டியாலயநிறுவனர் திருமதி.மாலதி யோகேந்திரனால் தொடக்கிவைக்கப்பட்டது.சான்றிதழ்களை மாலைதீவில்,ஆசிரியையாக,பணிபுரியும் திருமதி.நாகராஜாவும், சர்வதேசதமிழர் ஆசிரியரும் வழங்கிக் கௌரவித்தனர். மட்டக்களப்பு விபுலானந்த இசைக்கல்லூரியில்,பட்டம் பெற்ற மாலதி மிக திறமையாக இந்த,நடனக்கல்லூரியை நடாத்துதற்கு,எம்மினியவாழ்த்துக்கள்!! Sivanjali Nartanalaya ,Mrs.Malathy. Y.Tel.22140266 Fax.0047 22 140265



# ஹொலிவூட் திரையில் ஒலிக்கும் ஈழக் குரல்

## பாடகர் யோகேஸ்வரனுக்கு அனுபவம் புதுமை



இப்போது பிரிட்டன் உட்பட உலக நாடுகளில் உள்ள சினிமா தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டுருக்கும் உலகப் புகழ்பெற்ற ஆங்கிலத் திரைப்பட இயக்குனர் Stanley Kubrick இன்'ஹொலிவூட்' திரைப்படத்தில் ஈழத் தின் பிரபல பாடகர் மாணிக்கம் யோகேஸ்வரனின் தமிழிசை ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தமிழீழத்தில் பிறந்து- லண்டனில் வாழ்ந்து வரும் யோகேஸ்வரன் இந்தப் படத்தில் முக்கிய கட்டமொன்றில் பாடியதன் மூலம் தமிழின் இனி மையை ஆங்கில சினிமா ஊடாகப் உலகளாவப்பரப்பிய முதல் தமிழர் என்ற பெருமைக்கு உரியவராகின்றார்.

கர்நாடக சங்கீதத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற இவர் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடக்கும் மார்கழி மாத இசை விழாக்களில் பாடி சுப்புடு போன்ற விமர்சகர்களால் பாராட்டப்பட்டு- புகழ்ந்து எழுதப்பட்டவர்.

'Eyes Wide Shut' என்ற ஹொலிவூட் படத்தில் நாயகனாக வருபவர் நடிக்கும் முக்கிய காட்சியில்'காதலா? இன்பமா? இது ஒரு நரகமா?' என்று கடினமான ஆலாபரணத்தோடு யோகேஸ்வரன் பாடும் காட்சி ஆங்கில ரசிகர்களையே கவர்ந்து இழுக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

லண்டனில் Wimbledon ஓடியன்- Catford ABC -Ilford இல் ஓடியன்- Newham இல் Showcase ஆகிய திரைகளில் இப்படம் ஓடுகிறது.

ஹொலிவூட் நடசத்திரங்கள் Tom Cruise உடன் Nicole Kidman என்கின்ற கணவன்- மனைவியர் இணைந்து நடிக்கும் Eyes Wide Shut திரைப் படத்தில் பாடிய அனுபவத்தை பாடகர் யோகேஸ்வரனிடம் கேட்டேன்.

''லண்டனில் மிகப் பெரிய றெக்கோடிங் ஸ்ரூடியோவான Air Linhurst இல் இப் பாட்டுப் பதிவானபோது ஏற்பட்ட அனுபவமே புதுமையானது தான். மேல் நாட்டு வாத்தியக் கருவிகளுடன் தபேலா- மிருதங்கம்- கஞ்சிரா போன்ற வாத்தியக் கருவிகளை நானே வாசித்து பாடினேன். மேல் நாட்டு வாத்தியக் கருவிகளின் சத்தங்களுக்கு மேலால் ஆலாபரணம் செய்து பாடி முடித்ததே சுகமான அனுபவம்தான்'' என்று பதில் கூறினார்.




*நிஜ வாழ்விலும் தம்பதி- இந்தத் திரையிலும் தம்பதிதான்.*

திரையில் நாயகன் ஒரு வித்தியாசமான சூழ்நிலைக்குள் அகப்பட்டுத் தவிக்கிறபோது பின்னணியில் அந்த அவலத்தைச் சித்தரிப்பதாக யோகேஸ்வரன் பாட்டு அமைந்துள்ளது.

ஆங்கிலப் படங்களுக்கு இசை அமைப்பவர்களே பாட்டுக்களையும் எழுதுவார்கள். ஆனால் இப் படத்தில் குறிப்பிட்ட காட்சியில் யோகேஸ் வரனது இசைத் திறனை நேரில் தெரிந்து கொண்ட இசை அமைப்பாளர் Jocelyn Pook அவரை வைத்துப் பாட விரும்பினார். பாட்டு இல்லாமல் ஆலாபரணம் செய்ய வைத்தே அக் காட்சியைப் படமாக்க எண்ணினார்கள். பின்னர் யோகேஸ்வரன் அக் காட்சிக்கு ஏற்ற வகையில் பாடலையாத்து- அதன் பொருளை ஆங்கிலத்தில் சொன்னபோது அவர்கள் எல்லோருக்கும் பிடித்துவிட்டது.

கர்நாடக இசையில் நன்கு தேர்ச்சி பெற்றவராக யோகேஸ்வரன் இருந்த போதிலும்- ஜெர்மனியின் தலைசிறந்த Jass இசைக்குழுவான Dissidenten இசைக்குழுவில் கடந்த 5 வருடங்களாகப் பிரதான பாடகராக விளங்குகிறார்.

லண்டனில் 'சிவனோவா' என்ற இசைக்குழுவிலும்- உலகப் பகழ்



பெற்ற ஷோபனா ஜெயசிங்கின் நாட்டியக் கம்பனியிலும் The Shout எனும் மேலைத் தேச சாஸ்திரிய சங்கீதக் குழுவிலும் இணைந்து பல மேடை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்.

தமிழிசை- கர்னாடக இசை- பக்தி இசை- மெல்லிசை போன்ற இசைகளில் பல ஒலிப் பேழைகளை வெளியீடு செய்த இவர் உலகத்தில் முதல் முதலாக Tamil Classic எனும் ஒலிப் பேழையை ஜெர்மனியின் exil கம்பனி மூலம் வெளியிட்டு- மேலை த் தேச ரசிகர்கள் எமது தமிழிசையைக் கேட்டு ரசிக்கும்படி செய்தது அரிய சாதனையாகும்.

லண்டன் முருகன் கோயில் இவருக்கு வழங்கிய கலைமாமணி பட்டமும்- சென்னை அனைத்தலக தமிழிசை ஆராய்ச்சி நிறுவனம் தமிழிசை இளவரசு பட்டமும் இவருக்குக் கிடைத்த பெருமைகள்.

இவர் இங்கிலாந்தில் Goldsmith பல்கலைக்கழகத்தில் 5 வருடங்களாக இசை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

சங்கீதபூஷணம் நல்லைக்குமரன் முத்துக்குமாரசாமியிடமும்-சங்கீதபூஷணம் பாலசிங்கத்திடமும் பயின்றதை மறக்காமல் இருக்கும் யோகேஸ்வரன்- இந்தியாவின் தலைசிறந்த சங்கீத மேதை ரி.வி.கோபாலகிரு ஷ்ணனிடம் பயின்றார்.

லண்டனில் 1985 ஆம் ஆண்டு ஆசிய இசைக் கல்லூாரி நிறுவனத்தை ஆரம்பித்து- தான் கற்றுத் தேர்ந்த மிருதங்கம்- புல்லாங்குழல்- சங்கீதம் ஆகிய இசைகளைப் பயிற்றுவித்து வருகிறார். இவரது மாணாக்கர்கள் அரங்கேற்றம் கண்டிருக்கிறார்கள்.

1990 இல் ஈழத்துத் திருத்தலங்கள்- கர்நாடக தெரிவுகள்- திருமுறைகள் அகிய ஒலிநாடாக்களையும்- 1993-94 இல் வாழ்வே சங்கீதம் என்ற என்ற நாடாவை வாணிஜெயராமுடன் சேர்ந்து பாடி வெளியிட்டார். இசையமைப்பாளர் குமாரின் இசை அமைப்பில் திருமுருகன் நாடாவைத் தந்தார்.

1997இல் தமிழ் கிளாசிக் என்ற தனித் தமிழ்சி.டியை ஜெர்மனியில் வெளியிட்டார். பிராங்பேர்ட் உலக சங்கீதா நிகழ்ச்சியில் இவரால் பாடப்பட்டதே இந்த சி.டி.

**சர்வதேசதமிழர் கவியரங்கம்:**

**மலேசியா-வீரப்பனுக்கு அஞ்சலி!**

**அன்பார்ந்த தமிழறிஞ!**

அறிவால் உயர்ந்தாய்,
அகிலம் நடந்தாய்!
ஆற்றல் படைத்தாய்,
ஆண்டவன் அருளால்!
இனிய தமிழரை நீ
இனிதே போற்றினாய்!
ஈட்டியால் எம்மிதயம்
ஈரமாய் போனதையா!
உள்ளம் துவண்டதையா
உன்னருமை புரிந்ததையா!
ஊனமானார் நம்தமிழர்
ஊருலகம் கண்டவரே!
எனக்காய் டார்பனிலிருந்து
எழுச்சிமடல் அனுப்பிட்டீர்!
ஏன் தான் சென்றீரோ?
ஏங்குகிறோம்!சொல்லுமையா!
ஐயமற எம்பணியே
ஐக்கியமே தானென்றீர்!
ஒழுங்கும்,ஒழுக்கமும்
ஒற்றுமையும்தான் என்றீர்!
ஓதிடுவீர் திருக்குறள்! என்றீரே
ஓதிடுவோம்! நாளும்! ஐயா!!
ஔவைபோல் உழைத்தீரே
ஔடதமாய் வந்தீரே!உம் புகழ்வாழி!

**என்.எஸ்.பிரபு-நோர்வே**

**என் இனிய தமிழ்நாடே....!**

தனிமையில்,நானும்தமிழ்நாடுசென்றேன்
தன்னலமில்லா தமிழரைக் கண்டேன்
ஈழவர்க்குதவிடும் தமிழரைக்கண்டேன்
தாய்தமிழுக்குதவும்,தமிழரைகண்டேன்
மழலைகட்குதவிடும்தமிழரைகண்டேன்
மனம்விட்டுபழகிடும்தமிழரைகண்டேன்
பெண்கட்குரிமைகொடுப்பதைகண்டேன்
பேதமைஉணர்வு நீங்கிடக்கண்டேன்
ஊழல்சிலவகை ஒழிந்திடக்கண்டேன்
மனிதனில்மதவெறிகுறைந்திடகண்டேன்
குடிவெறிகாரர்கள்,குறைந்திடகண்டேன்
தெருக்குப்பை,கூளம்அகற்றிடகண்டேன்
ஆட்டோஓட்டுனர் அத்தனை பேரும்
ஒற்றுமையாக உழைப்பதைகண்டேன்
இப்படி ஒற்றுமை எதிலும் இருந்திடில்
தமிழன்தலைமுறைதளைத்தோங்கிடுமே

**எஸ்.சிவனேஸ்வரன், Magnus gt 7,0650 oslo ,Norway Tel.92807573**

**எங்குந்தமிழ்! எதிலுந்தமிழ்!**

செந்தமிழ்நாட்டுச் சிங்கங்களே,
சீறியே நீங்களும் வாருங்களே!
நந்தமிழ்மொழியை வாழவைப்போம்,
நாளும் பகைவரை வீழவைப்போம்!
தாய்மொழிக்கல்விதான் பிறப்புரிமை,
தமிழிலே கற்பது சிறப்புரிமை!
வாய்மொழியாகத்தமிழ்மொழியும்,
வளரவேண்டும் நல்ல எழுத்திலுமே!
எங்கும் எதிலும் தமிழ்மொழியை,
ஏற்றம் பெற்றிடச்செய்திடுவோம்!
இங்கு இதனைச்செய்திடவே,
இன்னுயிர்போக்கியும் வாழ்ந்திடுவோம்!

**முனைவர்.தமிழப்பன், Ph.D., 418.D,TNHB,Malar clny,AnnanagarW Chennai.600040,Tamilnadu,India**

**புதியமனிதனை ஆக்குவோம்**

புதியமனிதனை உருவாக்கிடவே
பொழுதெல்லாம் நினைவேன் - அவன்
மதியில் புதிய ஒளிபிறந்திடவே
மாளாக் கவிபுனைவேன்!
வேற்றுமைவலை, அறுத்தே மக்களை
வெளிவரவே அழைப்பேன் - எனக்கு
ஆற்றல் உள்ளவரையில் இதற்கே
அன்பாய் நான் உழைப்பேன்!

எப்படியும் ஓர் புதிய நற்காலை
என்முன்னே விடியும் - அந்த
ஒப்பில் காட்சியைக் கண்டுகளிக்க
காத்திருக்கும் விழியும்!

எழுச்சியைஊட்டும்,எழுத்துத்தொழிலில்
ஏகிடும் என்வாழ்க்கை - ஆம்
எழுந்திடும் கவிதைக்குரலுடன் தானே
விழுந்திடும் என் யாக்கை!

**டாக்டர்.இளங்கம்பன்**தலைவர்
**பழனித்தமிழ்ச்சங்கம்,சித்ரகூடம் 58,சிவகுமார் தெரு,பழனி-624601**
(தமிழகம் வரும் சர்வதேசதமிழர்கட்கு தமிழ்ச்சங்கம் அனுசு கவிசெய்யும்!)

**எழுதுகோலால்,என்றும்போர்**

எழுதுகோல் கருவியாலே
என்றும்போர் ஆடுவேன் யான்!
பழுதினும் வந்ததில்லை
பார்வையும் சாய்ந்ததில்லை!
அழுதவர்க்காகவுந்தான்
அகதிகட்காகவுந்தான்!
வழுவியோர்க்காகவுந்தான்
வழிகுறித்தாடுகின்றேன்!

மூடநம்பிக்கை மாய்ந்து
முன்னேற்றம் காண்பதற்கும்,
கூடவே நின்றுகொண்டு
குழிவெட்டாதிருப்பதற்கும்
காடெலாம் வீடாகக்
காணவே வைப்பதற்கும்
பாடெலாம் பட்டவர்க்கும்
பயன்குறித்தாடுகின்றேன்!

நெஞ்சிலே உழுதுகிண்டி
நெடுந்தமிழ் நீரைப்பாய்ச்சி
நஞ்சிலாக்கருத்தையெல்லாம்
நடுகின்றேன் கவிதைமூலம்!
அஞ்சுநாள் மட்டுமா?ஓர்
ஆண்டிலும் முளையுண்டாகும்!
கொஞ்சமாய்க் குறையின்,அந்தக்
குறைகுறித் தாடுகின்றேன்!

தாள்விடாக் கோலும்,கோலைத்
தாங்கிடுங் கையும் , மூளை
ஆள்விடா நினைவும் , கீறல்
அல்லொடு பகலுங்கொண்ட
நாள்முழுதோடினாலும்
நல்வயதாகி, ஆயுள்
நீள்வரை, கோல்,கை பற்றி
நீண்டபோர் ஆடுவேன் யான்!

**தாமரைத்தீவான்-திருமலை**

**S.Rajendram,Eachchntivu,Kinniya. E.P. ,SRILANKA; E.Litterary Society, 21Auvaiyar st,Trincomalee:Arul Publ. 37-7Central st,Uvarmalai,Trincomale**
(தங்கள் போரும்-பெயர்வும் கவிதைநூல் அருமையாக உள்ளது!மேலும் பல நூல்களை வெளியிட சர்வதேசதமிழர் அமைப்புகளுதவக!வளர்க பணி!ஆ-ர்)

**தொலைந்த இதயம்!**

ஓர்இதயம் ஒருதரம் தான் தொலையும்
அதுதொலைந்தால் மீளக்கிடைக்காது!
அப்படிக்கிடைத்தால் மீளதொலையாது
தொலைந்தால் அது இதயம் அல்ல
இதயமெனில்தொலைந்ததுண்மையல்ல
இதயத்தைதொலைத்த பலருலகிலுள்ளர்
யார் நெஞ்சில் யார் இருப்பர்?இறைவா
உண்மையை சொல்லிவிடு!இறைவா!!

**எம்.பிரபாகரன்-ஒஸ்லோ-5**

**முடியாவிட்டால் ஓடடா!**

முடிந்தால் பாரடா,
முடியாவிட்டால் ஓடடா!
முயற்சியினால் ஆகாதது,
மூவுலகிலுமே இல்லையடா!

அவன்தான் படைத்தான்,
அற்புத உடலிதை!
அறிவும் அன்பும் பெருகிடவே,
அதிலமைத்தான் சிரசும்,மனசும்!

பகுத்தறிவென்ற பாசுபதாஸ்திரம்,
பயன்படவென்றே நமக்களித்தான்!
பண்போடு செயல்பட்டு வரவே,
பல்நெறி உலகினை சிருஸ்டித்தான்!

ஆசையும்,கோபமும் தான்,
ஆக்கத்தின் எதிரிகள் என்பதை,
ஊக்கத்தை விதைத்த அவனோ
ஏக்கத்திற்குள் மறைத்துவிட்டான்!

நோக்கத்தை புரிந்துகொண்டால்
தெளிந்திடும் முடிந்திடும்!
தூக்கம் கலையாவிட்டால்
தொலைந்திடும்! அழிந்திடும்!!

**ஆரையம்பதி.க.சபாரத்தினம்**

**வருக! வருக!! வெண்புறாவே!!!**

ஓ!வெண்புறாவே!
நீ இப்போது,எந்தத்திசையில்?
உன்வரவிற்காய்,
எத்தனை ஜீவன்கள்
இங்கு தவம் கிடக்கின்றன!!
நாம் உனக்கு விரோதிகளென்றா?
வெகு தூரத்தில் நீ!
எம்மவர்,செய்த குற்றமென்ன!
நீ பறிபோக
உன்னை,சின்னமாய்மட்டும்
பார்த்துப் பார்த்து,
சினந்திருப்பவரிங்கு!
நாம் சிரித்துமகிழ்வது
எப்போது? எப்போது??
நீ சமூகமளிக்காததால்,
ஏற்பட்ட அவலங்கள்
உனக்கு தெரியாதா?என்ன!!
உலகப்போர்கள்,
காஸ்மீர்,பாலஸ்தீனம்
கொசோவா!என இந்த வரிசையில்
எம் ஈழதேசமும் எரியுண்டு போக
சம்மதமா? உனக்கு!

யுத்தம் தொடர்வதிலும்,
மனிதஉயிர்கள் அழிவதிலும்
ஆட்சேபனையில்லையா?உனக்கு!
எத்தனைபோர்கள் உயிர்ப்பலி?
அனாதைகள்,விதவைகள்,
உடலூனமுற்றவர்,மனஊனமுற்றவர்!
காணாமல்போனோர்!கலைக்கப்பட்டோர்
இவர்களை வெறுத்தென்ன,
நீ மட்டும் தலைமறைவாக?
சோகங்களும்,வேதனைகளும்
சொல்லி அழுவதற்காய்!-உன்
வரவிற்கான எதிர்பார்ப்பு
இப்போவாவது புரிகிறதா?
ஓ! என் இனிய வெண்புறாவே!!
நீ எப்போதாவது இத்திசையில்
வரப்போகிறாயா?தயவாகசொல்லிவிடு!

**இ.சிவதர்சிகா, யாழ்-நீர்வேலி**

**தமிழ் வர்த்தகர்களே! விளம்பரம் தந்து வர்த்தகம் பெருக்குங்கள்!!**
**தமிழையும் வளருங்கள்!எழுத்தாளர்களே, அறிஞர்களே பங்களியுங்கள்!**


# கோடைவிடுமுறையில்..!....பிரபு

கோடைவிடுமுறையில் சீனா,யப்பானும்
கொரியாவும் போன கதை,
சோடையின்றி கேட்டிடுவீர்!
சொல்லிடுவேன் பயனுறவே!
இருபத்து நான்குநாட்கள், இனிமையான பயணமது!
என்மனங்கவர்ந்த ஆசியாவில் மறக்கலாத பயணமது!!
பெரிதான நாடாம், பதிமூன்று பிலியன் பேர்
பிள்ளைபெறுவதிலும் ஒருபிள்ளை சட்டம்தான்
அரிதானதலைவர் மாசேதுங் கட்டிவைத்த
ஆசியப்பெருநாடாம் ரஸ்யாக்கு அடுத்ததுவாம்!
கரிதான யானையைப்போல் பலங்கொண்ட சீனாவோ
கம்யூனிசப்பெருநாடாம்!கட்டுப்பாடின்னும் இழக்கலை

பிரிட்டிஸ் விமானத்தில் குடும்பமாய் ஏறி நாமும்
பூரிப்பாய் வந்தடைந்தோம்!பீகிங்கின் விமானதளம்!
அரிதான தகவல்கள் அனுமதிகள் எல்லாமே
ஒஸ்லோவில் தூதரகங்களில் பெற்றதனால்
சரியானபடி நாமும் பிரயாணஇடம் பார்த்தோம்!
சாதுவான மஞ்சள்நிறம்,சாதுவான மக்களவர்!
சிரிப்பால் வென்றிடுவர்! சீனமக்கள் நல்லவர்கள்!
சீர்உலகை பார்த்தறியார்! கம்யூனிசகொடுமையது!
புத்தரின் ஆலயங்கள்,கன்பூசியஸ் ஆலயங்கள்
பூரிப்பாய் பார்த்திட்டோம்!புதுமனிதர் தான் கண்டோம்!
எத்திக்கும் இருந்துவந்த சீனர்கள் எல்லாம் எம்மை
ஏறஇறங்க பார்த்திட்டு எந்த இடம்?எனக் கேட்டார்!
தித்திப்பாய் சிரித்திட்டு புகைப்படமும் சேர்ந்தெடுத்தார்!
சீனருடன் தமிழர் கப்பலிலே வர்த்தகமும்
செய்தகதை கூறியதும் மகிழ்ந்திட்டார்!புன்னகைத்தார்!

சீனத்து அழகிகளும்,சிங்காரச் சிறுவர்களும்
சீனத்துபொம்மைகளாய் சூழ்ந்தெம்மை கதைகேட்டார்!
வானத்தில் பறந்துவந்த மண்ணிறத்துப் பறவைகளை
வான்கடந்து நோர்வேசென்ற வரலாறும்தான்கேட்டார்!
பானத்தில் தேனீரில் புகழ்பெற்ற தீவினிலே
பார்புகழும் தமிழர்க்கு குறையென்ன?எனக்கேட்டார்!
கானத்திலும் சிறந்தநாடு சிறிலங்கா என்றாலும்
கருணையுள்ளம்,சிங்களர்க்குவற்றிவிட்டகதைசொன்னேன்
மாசேதுங் நினைவிடத்தை பார்ப்பதற்குநாள்தோறும்-
மக்களெல்லாம் திரள்கின்றார்!கால்கடுக்க நிற்கின்றார்!
ஆசையெல்லாம் சீனமக்கள்,பொதுவுடமைபெற்றிடவே
ஆக்ரோசப் புரட்சிசெய்தார்! நாற்பத்து ஒன்பதிலே!!
மியூசியங்களெல்லாம் புரட்சிதனை வலியுறுத்த
மென்மையான சீனர்கள் சிரிப்பாலே எமைவென்றார்!
ஆசைதீர சீனர்களின் அறுசுவையும் உண்டோமே!
ஆனா,பாம்பதனை,உண்ணலை!தவளையோ, தனிருசியே

சீனப் பெருஞ்சுவரும்,தடுக்கப்பட்ட பெருநகரும்
செஞ்சதுக்கம்,கோடைமாளிகையும் புதுமைக்காட்சியது!
சீனர்களில் சிலபேரே ஆங்கிலம் பேசிடுவர்,-என்றாலும்
சிறுதகவல்,வழிகாட்டி,கைப்பாசை உதவினவே!
சீனாவின் துறைமுகமாம், சியான்சினில் கப்பலேறி
தென்கொரியத்துறைமுகமாம் இஞ்சோனில் இறங்கினமே
தேனாக பேசிடுவர்,தொழில்நுட்பவல்லுனராம் இவர்தம்
தென்கொரியதலைநகராம் சியோல்வந்து சேர்ந்தோமே!
தானாக வந்தெம்மை குசலம் விசாரித்த
தென்கொரியமக்களவர் தென்றலாய் உபசரித்தார்!
மானாக துள்ளிவரும் தென்கொரிய நங்கையர்கள்
மகிழ்வாக ஆங்கிலத்தில் உதவிடவா?எனக்கேட்பர்.
தானாக தேடிவந்தார் மட்நகர் நண்பர் ரமீர்
சர்வதேசதமிழர் தொடர்பாளர் அவர்தானே!
கொரியாவின் தலைநகரில் நெற்றியிலே பொட்டுடனே
கோபமற்ற புத்தர்களை கோயில்களில் நாம்கண்டோம்
ஆரியர்கள் போலன்றி,அன்புடனும், நட்புடனும்
அனைவரையும் மதித்திடும் அரியவர்கள் தென்கொரியர்
எவர்லாண்ட் கண்காட்சி! எம்மகனின் பிறந்தநாளும்
இனிப்பாக களித்திட்டு,கரிபியன்பேயில் குளித்திட்டோம்!
அவர்வாழும் வாழ்வுதனை தமிழர்கள் பார்த்திடுக!
உலகமெலாம் சென்று ஊர்,உலகம் பார்த்திடுக!!
தாக்குவாண்டோ கலை தந்த, வல்லவர்கள்
தரம்மிக்க பொருட்களையே விற்கின்றார்!
ஏக்கமுடன் சீனர்கள் தான் பார்த்திருக்க,
எங்கும்சென்று வருகின்றார் தென்கொரியர்!
ஆக்கமுடன்,ஊக்கமாக வர்த்தகமும்
அவர் செய்துவருகின்றார் மகிழ்கின்றார்!
தேக்கமற பொருளாதாரமுயற்சியிலே
தெவிட்டாமல் உழைக்கின்றார் தென்கொரியர்!
தலைநகராம் சியோலின் தென்கிழக்கில்
தடதடென ரயில்மூலம் புசான் வந்தோம்!
கலைநயங்கள் கூடிய கொரியநாட்டில்
கவினுறுகலையகங்கள்,காட்சிகண்டோம்!




புசான்துறையில் கம்பன் கடல்கப்பலேறி
பூரிப்பாய்,வந்தோமே யப்பான்-சிமனோசாக்கி
விசா,பார்த்து இலங்கையர் இதுவே முதலில்
விஜயம் இவ்வழியால் புதினம்! என்று
மசமசப்பாய் நின்ற யப்பான் குடிவரவார்,
மாறிமாறி கேள்விகேட்டு குடையலானார்!
அசகாய சூரரையா நம் தமிழர்கள்
அய்ரோப்பாவில் வாழுகின்றார் பலலட்சம்
விசயம் தெரியாதா உமக்கு என்று
வினயமாக கேட்டிட்டேன் அவரிடமே!
பிசுபிசுத்துப்போனார் அந்த யப்பான்காரர்!
பிழைபொறும்!என பிடரியைசொறிந்தார்!
அமெரிக்கன் போட்ட அணுக்குண்டால்
அழிந்ததே கிரோசிமா,நாகசாக்கி
சுமைதீர,கொட்டிவிட்டான்,ஆரியன்
சும்மா,ஆசியாவில்,கைவைத்தான்!




எமையெல்லாம் அதிர்ச்சியாக்கி
உலகத்தை ஊமையாக்கி
பகைமைதீர கொட்டிவிட்டான்!
பாழும்குண்டை, போட்டான்!
கிரோசிமாவை,பார்த்துவிட்டு,நாமும்
திக்பிரமை,அடைந்துநின்றபோது...!
அரோகரா! நம்ம சத்யசாயிபாபா படம்
அட! இவர் எப்படி இங்குவந்து சேர்ந்தார்?

கியோட்டோவின் அழகிய புத்தர்ஆலயங்கள்
கிருஸ்ணரின் அவதாரமேயென காட்டின!
அயோத்திய நாயகன் இராமனின்,
நாராயணா,சிறிதேவி,வாயு சிற்பங்கள்
பயபக்தியாய் வணங்கினோம்!



பண்பாடு,பழக்கம் இந்துவை காட்டின!
ரோக்கியோவின் அருங்காட்சியகங்கள்
ஆலயங்கள்,அதிசயங்கள் கண்டோம்!
போக்கும்பொழுதை பயனாய் போக்கி
ரொயாட்டொ,சோனி காட்சியகம் கண்டோம்!
கிமோனோவில் யப்பான்பெண்களின் அழகும்
குண்டின்வேகத்தில் பாயும் புல்லட்டுறெயினும்
யமன்களப்பா! யப்பானிய தொழில்நுட்பநிபுணர்
யாவர்க்குமே உலகில் ஏற்றுமதி செய்கிறார்!
காகொனே சுடுதண்ணீர்க் கிணறுகள்!
களிப்பாக குளித்திட அரும்பெருமிடங்கள்!
அப்பனே! கடவுளே! நிர்வாணமாக தனித்தனி
ஆண்களும்,பெண்களும் குளிப்பாடுகின்றார்
தப்பாமல் நாங்களும் அவர்களைப் போலே
தவறாமல் குளித்திட்டு,இடங்களும் பார்த்தோம்!
எப்போதும் அன்பான டாக்டர்.சச்சி
சிறிகாந்தா துணைவியார் யப்பானியர் தாமே!
தப்பாமல் எமைஅழைத்து விருந்தும் அளித்தார்!
சச்சிகோ,சகி,சங்கீதா அன்பாய் பேசிமகிழ்ந்தார்!
பூகம்பத்தால் அழிந்த கோபே!
புதுமெருகாக விளங்கிடல் புதுமை!
ஆகா!இதுவா பூகம்பபூமி?ஆச்சரியம் வந்ததே எமக்கு
போகவே மனமுமின்றி பொல்லாத கோபேயைவிட்டு
பை!பை!கூறியே நாமும் பாரியகப்பலில் சீனாவந்து
ஆகாயகப்பலில் நோர்வேவந்தோம்!அரியபயணம் ஆகா!

# யோக ஆசனங்கள் செய்வோம்!

மனிதர்கள் தம் உடலைப்பாதுகாக்க யோகாசனமும், மனதைப்பாதுகாக்க தியானமும் செய்வது அவசியம்.சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம்!என்பதற்கமைய,உறுதியாக,உடலை வைத்திருக்கவேண்டும்.உடம்பை தெய்வஒளி வீசச்செய்ய,உயிர்குடியிருக்கும் கோவிலாக மதித்து செயல்படவேண்டும். உடம்பின்றி உணர்வு இல்லை.உடல்கெட,உயிர் பிரியும்.
ஓ-வடிவில் 280நாட்கள் தாயின் கருப்பையில் குடியிருக்கும் குழந்தை,பூமிக்கு வந்ததும்,முதலில் செய்வது, ஓ! வெனக் கதறுவதாகும். அப்போது,சுவாசிக்கத்தொடங்கும் நேரமே,பிறந்தநேரமெனக்கூறப்படுகிறது.பின்,நாளுக்கு,21600 தரம்,சுவாசித்து,வாழ்ந்து,கடைசியில்,சுவாசத்தை நிறுத்துகிறான்.
சிதம்பரத்தில் நடராசர்கோவிலில்21600 ஓடுகள் சுவாசத்தையும்,72000ஆணிகள்,நாடிநரம்புகளையும்,பொருத்தப்பட்ட,64சட்டங்களும் ஆயகலைகளையும்,கூரைகளிலுள்ள 9 தங்ககலசங்கள், மனிதஉடலிலுள்ள,9வாசல்களையும்,10தூண்கள் சிவபுராணத்தையும் குறிக்கும்.
சிதம்பர-ரகசியம்,என்பது,நடராசரின் நடனத்தில் பிரபஞ்சத்தின்இயக்கம் தங்கியுள்ளது!என்பதை குறிக்கிறது.யோகிகளால் வகுக்கப்பட்டு,மன்னர்களாலும்,மக்களாலும் மதிக்கப்பட்ட யோகாசனங்களை நாம்,மீளவும் கொண்டுவரவேண்டும்.

7200நரம்புகளில்,3நரம்புகள்,முதன்மையானவை இவை,இடகலை,பிங்கலை,சுழிமுனை,எனப்படும் பொறிகளின் செயலுக்கு நரம்புகள் அவசியம். பொறிகளின் செயலுக்கு மனம் முக்கியம்.மனத்தை,இயக்குவது புத்தி.புத்தியை இயக்குவது ஆன்மா.எம் உடலையும்,மனத்தையும் இணைப்பது உயிர்,அல்லது,பிராணன். பிராணசக்தியை வளர்த்தால் உடலும்,மனமும் உறுதியாகும். நாம் இறக்கும்வரை தெய்வபொலிவு பெற்று இளமையை காக்கவல்ல யோகாசனத்தை ஆண்,பெண் இருபாலாருமே நாளாந்த கடமைகளில் ஒன்றெனக் கருதவேண்டும்.நோயற்றவாழ்வு வாழ யோகாசனம் முக்கியம். ஒரு கத்தியை தீட்டாமல் வைத்திருந்தால் அது துருப்பிடித்து மங்கிப்போவதுபோல,யோகாசனம் செய்யாத உடல் மங்கிவலுவிழந்து இருக்கும். மொத்தம் 84 ஆசனங்கள் உண்டெனினும்,10 முக்கிய ஆசனங்களாவது,செய்வது பிரதானம். யோகாசனம் நன்கறிந்த குருவிடம் பயில்வது தான் முறையானது.தாமாகவும் செய்யலாம்.

1.சித்தாசனம்:
தியானத்தில் இருப்பதற்கு ஏற்ற இலகுவான முறை.இதில்,எப்போதும்இருந்துபழகல்வேண்டும் ஒருகாலை மடித்துவைத்து,மறுகாலை அதன் மேல் மடித்துவைத்து இலகுவாக அமர்தல்.

2.பத்மாசனம்:
வலதுகாலை மடித்து, இடதுதொடைமீதும்,பின் இடதுகாலை மடித்து,வலதுகால்மீதும்வைத்து கைகளை நீட்டி,முழந்தாளில் வைத்து தியான வடிவில் அமர்தல். இது உடலிலுள்ள 72000 நரம்புகளை வசப்படுத்தும்.ஆதாரசக்கரங்களுக்கு,வலுவளிக்கும்.மூச்சை சமனாக்கும்.குண்டலினி சக்தியை நேராக மேலெழச்செய்யும்.

3.சிரசாசனம்:
தலைகீழாக,கைகளை ஊன்றி நிற்றல்.முதலில் சுவரோரமாக தலையணையை வைத்து,ஒருவரின் உதவியுடன் செய்யவும்.2நிமிடம் செய்ய மூளைக்கு இரத்தஓட்டம் கூடும்.தலைவருத்தங்கள்,தீரும்.குண்டலினிசக்தியை தட்டியெழுப்பும்

4.மயூராசனம்:
இருகைகளையும் நிலத்தில்ஊன்றி,முழங்கைகளில் வயிற்றை தாங்கி உடலை நீள்வாக்கில சமநிலையில் தாங்கல்.2நிமிடம் செய்ய வயிற்று பிணி நீங்கும்.

5.தனுராசனம்:
குப்புறப்படுத்து,காலையும்,தலையையும் உயர்த்தி,கைகளால் பின்பக்கமாக காலைப்பிடித்து நாண்ஏற்றிய வில்போல் இருத்தல்.2நிமிடம் செய்ய,முதுகு,கழுத்து,வயிற்றுக்கு உறுதிதரும்

6.பஸ்சிமதானாசனம்:
கால்-கட்டைவிரல்களை கைகளால் பற்றியபடி தலையை முழங்கால்கள் நடுவே 1நிமிடம் வைத்திருக்க இடுப்பு,அடிவயிறு நலம்பெறும்.

7.சர்வாங்காசனம்:
மேலேபார்த்தபடி படுத்து,கால்களை உயர்த்தி கைகளை முதுகின்கீழ் கொடுத்து,உடலை உயர்த்தி,கழுத்துதசையில்,தாங்கி தலைகீழாக நிறுத்தல்.2-5நிமிடம் செய்ய கழுத்துசுரப்பியை (தைரோயிட்) சீராக்கும்.மலசிக்கல்,நீரழிவு,விந்தழிவுகளை சீராக்கும்.

8.கலாசனம்:
மேலே பார்த்தபடி கைகளைநீட்டி படுத்து,கால்களை,மேலுயர்த்தி,பின்னே வளைத்து,தரையை கால்விரல்களால்,தொடல்.இக்கலப்பைஇருக்கையில் 2நிமிடம் இருக்க இடுப்பு,மார்பு,கழுத்து, அடிவயிறு அனைத்திற்கும் நலமாகும்.




கிருஸ்ணனுக்கு யோகசாம்ராட் பட்டமளிப்பவர்:ராமச்சந்திரஉடையார் அருகே: யோகா ஆசிரியர்: ராம்பாஸ்கர், பல்டாக்டர்: ராஜன்

9.மச்சாசனம்:
பத்மாசனத்தில் மல்லாந்து படுத்து,குரல்வளை நன்குவளைய தலையை பின்னால் அழுத்தி, கைகளால் கால்கட்டைவிரல்களை பிடித்தல். இந்த மீனிருக்கை 4நிமிடம்செய்ய கழுத்து, தோள் பிடரிக்கு நலம்.

10.சவாசனம்:மல்லாந்துபடுத்தபடி,கைகளை நேராக தொடையருகை வைத்தபடி 5நிமிடம் அமைதியாக இருத்தல்.இதனால் களைப்பு நீங்கும். காதைசுற்றி ஒருதுணியைக் கட்டிக் கொண்டும் செய்யலாம்.
கையை இதயத்தில் வைத்துக்கொண்டு,ஆத்ம தியானம் செய்பவரும் உளர்.
யோகாசனங்களை காலை,காலைகடன், தேக சுத்திசெய்தபின் செய்க! மாலை 6 மணிக்கும் செய்யலாம்.யோகாவுடன் உடற்பயிற்சிகளை சேர்க்கக்கூடாது.ஆண்,பெண்,சிறார்கள்,முதியோர்க்கும் யோகாசனம் நல்லதே!என அறிக. யாவரும் இன்புற்றுவாழ யோகாசனம் நன்றே!


**எம்.எஸ்.உதயமூர்த்தி-நோர்வே**



ராம்பாஸ்கர்



கலாசனம்



**உலகத்தமிழர்கள் படிக்கும் ஒப்பற்ற இதழான சர்வதேச தமிழர் இதழுக்காக**
**யோகா ஆசிரியர் திரு. ராம்பாஸ்கர் அவர்களுடன் நேர்முகம்**

1. யோகாசனம் என்றால் என்ன?

யோகம் + ஆசனம் என்பதே யோகாசனம். யோகம் என்றால் ஒரு முகப்படுத்துதல் இரண்டறக்கலத்தல் என்று பொருள். ஆசனம் என்பது ஒரே இடத்தில் இருப்பது என்பதைக் குறிப்பது. உதாரணம் ஒருவர் நம் வீட்டிற்கு வந்தால், ஆசனத்தில் அமருங்கள் என்று ஒரு நாற்காலியை காட்டுகிறோம். உங்களுக்கு சுகமான தோற்றத்தில். நாற்காலியில் அமருங்கள் என்பதே அந்த உபசாரத்தின் கருத்து. மனித உடம்பு ஒரு புனிதமான ஆலயம். இந்த உடம்பை உறுதி உடையதாகவும் நெகிழ்வு உடையதாகவும் செய்துகொள்ள வேண்டும். இதை மிகுந்த கவனத்துடன் பேணி வர வேண்டும். மிக மென்மையாக போற்றி வரவேண்டும். உடலை பேணுவதற்கும் அதை மிக லேசாகவும் உறுதியாகவும் வைத்துக்கொள்வதற்கும் வழிகாட்டுவது யோகாசனம்.

2. யோகாசனத்தின் நன்மைகள் என்ன? இதற்கும் ஜிம்னாசியத்திற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

ஜிம்னாசியஸ் என்னும் உடற்பயிற்சியில் உலகநாடுகள் பலவற்றில் நடந்த போட்டிகளில் ஏராளமான பரிசுகள் பெற்றும் பேரும் புகழும் பெற்ற உலகப்புகழ் பெற்ற பிரபல வீரர் சாண்டோ ராமமூர்த்தியை தெரியாதவர் யாரும் இருக்கமுடியாது. அவர் நீரிழிவு நோயால் அவதிப்பட்டார். காலில் ஆணி குத்தி, டாக்டர்களால், கைவிடப்பட்டு மிக இளம்வயதில் காலமானார். இதை நீங்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும் நாம் எந்த பயிற்சி செய்தாலும் செய்து முடித்ததும் உற்சாகமும் சந்தோசமும் வரவேண்டும். அது உடற்பயிற்சியில் கிடைக்காது. உடற்பயிற்சி கருவிகள் வாங்கவே பல லட்சம் ஆகும். நீங்கள் பயிற்சி சாலை சென்றால்தான் ஜிம்னாசியஸ் பயில முடியும். ஆனால், யோகாசனம் கற்றுக்கொண்டு எவ்வித செலவுமின்றி, நீங்கள் வீட்டிலேயே செய்யலாம்.

| உடற்பயிற்சி | யோகாசனம் |
|---|---|
| சதைக்கோளங்கள் உருட்டி திரட்டி பார்க்க அழகாக இருக்கும்படி செய்யும். செய்ததும் களைப்பு வரும். அடித்துப் போட்டாற் போல் இருக்கும். உடற்சக்தி வீணாகும். நோய்கள் வரும். தடுக்கும் ஆற்றல் இல்லை. சதைகளை மட்டுமே கட்டுப்படுத்தும். | யோகாசனத்தில் கோபம் கட்டுப்படும். மனம் ஒரு நிலைப்படும் உடலும் மனமும் மாபெரும் வலிமை பெறும். என்றும் இளமையைத்தரும். வந்த நோய்களை விரட்டும் நோய்கள் அணுகா வண்ணம் பாதுகாக்கும் நமது உடலிலுள்ள 72 ஆயிரம் நாடி நரம்புகளையும் தூண்டி விடும். செய்து முடித்ததும், கை, கால்களில் புத்துணர்ச்சியும் உற்சாகமும் உண்டாகும். |

3. உங்களுடைய குரு யார்?

சிதம்பர யோகி என்.ராஜன். அகில உலக ஸ்ரீராமகிருஷ்ணா மடத்தின் தலைமை குரு ஸ்ரீரங்கனாதனாந்தாஜீ. ரிஷிகேஷ் ஸ்வாமி. விகானந்தா (கேம்ப் அமெரிக்கா) ஆசனா ஆண்டியப்பன், ஆகியோர்.

4. இந்த பயிற்சி எத்தனை தினங்கள் கொடுக்கிறீர்கள்?

அவரவர் செய்யும் முறையையும் உடல்வாகையும் பொறுத்து அமையும். சாதாரணமாக ஒருவர். மூன்றுமாதம் பயின்று கொண்டால் பின்னர் அவர் வீட்டிலேயே செய்து கொள்ளலாம்.

5. யோகாசனத்தை பிழையாக செய்தால் ஏதாவது பக்கவிளைவு ஏற்படுமா?

ஆமாம். அவசியம் குருவின் மூலம் கற்றுக்கொண்டு பின்னர் செய்வது நன்மை தரும்.


நேர்முகம் கண்டவர்
கவிஞர் இரா. இரவி,
5-எ, இருளப்பக்கோனார் சந்து,
வடக்குமாசி வீதி, மதுரை-1
இல்லம்: ☎ 631505
மின்னஞ்சல் era-eravi @ hotmail.com

நேர்முகம் தந்தவர்
யோகா ராம்பாஸ்கர்,
முகந்தனூர் அஞ்சல்,
அம்மையப்பன்வழி-613 701.

6. யோகாசனம் செய்வதற்கு ஏற்ற நேரம் எது?

பிர்ம்ம முகூர்த்தம் என்கிற அதிகாலை 4.30 - 6.00 மணி வரை. மாலையிலும் 5.00 - 6.00 மணி வரை செய்யலாம். காலையில் உடல் வளையாது. மாலையில் நன்கு வளையும். ஆனால், காலையில் செய்வது மிகச்சிறந்தது.

7. ஆண் பெண் இருபாலரும் செய்யலாமா? இருவருக்கும் பொதுவானதுதானா? அல்லது தனித்தனி யோகாசனம் உள்ளதா?

ஆண், பெண், சிறுவர், முதியவர் என்று அவரவர்களுக்கு ஏற்றவாறு ஆசனங்கள் உண்டு. பெண்களின் உடற்கூற்றை பொறுத்து ஆசனங்கள் மாறுபடும்.

8. பெண்கள் யோகசனம் பயின்றால் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவிட முடியுமா?

பெண்களுக்கு சமத்துவமும் சுதந்திரமும்தான் ஒரு நாட்டு முன்னேற்றத்தின் அளவு கோலாகும். ஒரு தாய் நோயற்ற உடலை பெற்றிருந்தால், ஒரு குடும்பமே. ஆரோக்கியமாக திகழும் பெண்கள் ஆரோக்யமாக இருப்பதன் மூலம் அவர்கள் வாரிசுகள் அதாவது சமுதாயமே ஆரோக்கியமுடையதாக இருக்கும்.

9. நீங்கள் இதுவரை எத்தனை நபர்களுக்கு பயிற்சி அளித்து இருக்கிறீர்கள்? எத்தனை ஆண்டுகளாக யோகா பழகி வருகிறீர்கள்?

ஐயாயிரம் பேர் வரை இருக்கும். 20 ஆண்டுகளாக பழகி வருகின்றேன்.

10. அட்டாங்க யோக ரகஸ்யம் என்கிறார்களே. அது என்ன?

அஷ்ட + அட்ட என்பது எட்டு என்ற பொருளாகும். யோகமானது. எட்டுப்படிகள் கொண்டது. யாருமே படிப்படியாகத்தான் ஏறமுடியும். நேரே தாவ முடியாது. அந்த எட்டுப்படிகளே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், புலனடக்கம், தாரணை, தியானம், சமாதி என்பவை. இயமம், நியமம் என்ற முதல் இரண்டு படிகள் ஒழுக்கத்தால் உண்டாக்கி கொள்பவை. அடுத்தப்படிகள் எல்லாம் பயிற்சியால் சாதித்து கொள்ளத்தக்கவை.

11. மனிதர்களின் பல்வேறு பிரச்னைகளை தீர்க்கவழி என்ன?

இன்று மனிதர்கள் மன இறுக்கம், தூக்கமின்மை, மன உளைச்சல். அதன் காரணமாய் இரத்த அழுத்தம். மனோவியாதி போன்ற பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாகிறார்கள். பல்வேறு குடும்பப் பிரச்னைகள். பிறர் மூலம் துன்பங்கள். பணத்தால் வரும் துன்பம் நோய்களால் வரும் துன்பம். இளைய சமூகத்தின் போதை மற்றும் தீயொழுக்கத்தால் வரும் துன்பம் இப்படி எண்ணிலடங்கா துன்பங்களை பிரச்னைகள் என்று மனிதர்கள் ஏராளம் சந்திக்க வேண்டியிருக்கிறது. இந்த பிரச்னைகளுக்கு தீர்வு எங்கே இருக்கிறது? நம்மிடமே இருக்கிறது. மனிதர்களுக்கு துன்பங்கள் இரண்டு வழிகளில் வருகிறது. ஒன்று சூழ்நிலைகளால். மற்றொன்று வினைப்பயன் வழியாய் வருகிறது. யோகத்தன் ஒரு பகுதி. யோகாசனப் பயிற்சியாகும். இந்த யோகாசன பயிற்சிகளை முறையாக செய்வதின் மூலம் நரம்புகள் புத்துணர்ச்சி பெறுகின்றது. தசைகள் இலகுவாக மென்மையும் புது வலிவும் பெறுகிறது. உடல் உபாதைகள் நீக்கப்படுகின்றன. யோகாசனங்கள் உடலின் பல்வேறு பகுதிகளிலுள்ள சுரப்பிகளை சீராக சுரக்கவைத்து, நோய்கள் வராவண்ணம் தடுக்கின்றன. தியானமும் யோகத்தின் மற்றொரு பகுதியாகும். இந்த தியானத்தின் ஆரம்பநிலையாகிய மனஒருமுருக பயிற்சி மூலம் நினைவாற்றல், பொறுமை, சகிப்புத்தன்மை, மனஉறுதி, தன்னடக்கம், மனசாந்தி இவற்றை பெறலாம். இதன் வாயிலாக மனம் போனபடி தீயவழிகளில் போகாமல் இளைஞர்களையும் மற்றவர்களையும் காப்பாற்றி கொள்ளவும் முடியும். இந்த தியான முறையை பக்தியோக தியானமாக செய்வதால் சூழ்நிலையால் வரும் துன்பங்கள் மட்டுமின்றி, வினைப்பயன் வாயிலாக வருகிற துன்பங்களையும் வெல்ல முடியும் என்கின்றனர் சித்தர்கள்.

12. சித்தர்கள் என்கிறீர்களே யார் அவர்கள்?

தமிழ்நாட்டிலே வாழ்ந்த அருளாளர்கள் சித்தர்கள் மக்கள் நலமாக வாழ வைத்திய நெறி, வகுத்துத் தந்தவர்கள் சித்தர்கள். நான்-எனது என்ற சின்ன வளையத்திற்குள் சிக்காமல் வாழ்க மானிடம் வெல்க உலகம் என்று உலகமெல்லாம் சிறக்க சிந்தித்தவர்கள் சித்தர்கள். ஆன்ம

விடுதலைக்கு அரிய வழிகாட்டியவர்கள். இன்னும் நம்மிடையே எளிமையாய் இருக்கின்றனர். தமிழ் சித்தர்கள்தான் ஆண்டவன் உன்னுள்ளே இருக்கின்றான். உன் உடம்புதான் பரம்பொருள் குடிகொள்ளும் ஆலயம். அந்த ஆலயத்தை சுத்தப்படுத்து. பூசைசெய். இறைவன் குடியேறிவிடுவார். இன்பத்தை கண்டு பெருமகிழ்வும் துன்பத்தைக்கண்டு கலக்கமடைந்து விடக்கூடாது. அவை இரண்டையும் சமமாக கருதக்கூடிய நிலைக்கு உன்னை உயர்த்திக்கொள். மரணமிலாப்பெருவாழ்வை. நிச்சயம் நீ அடையலாம் எனத் தொட்டுக்காட்டியவர்கள். உலகிற்கு எடுத்துக்கூறி முழக்கமிட்டவர்கள் சித்தர்கள்.

13. தியானம் செய்வது எப்படி?

உடம்பை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். உடம்பை தூய்மையாக வைத்துக்கொண்டால்தான். மனத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள முடியும். இதற்கு இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். இப்படி இருந்தால் மனதிற்கு தானே அமைதி வந்துவிடும். நாம் வாழும் வாழ்க்கையினை உணர்ந்து அதை நடத்துகின்ற முறையிலேயே நம் உடம்பை பார்த்து கொள்ளலாம். அது நோயில்லாமலும் லேசாகவும் லாவகமாகவும் இருந்து இயங்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு உடம்பு இருந்தால்தான் நாம் தியானத்தில் அமரும்போது. நம் உடம்பு துன்பம் அடையாமல் இருக்கும். தியானத்தில் முழு நேரமும் ஈடுபட்டு இருக்கமுடியும்.

14. இன்றைய மனிதர்களின் அதிக துன்பங்களுக்கு காரணம் என்ன? போக்கும் வழி என்ன?

துன்பங்கள் யாவையும் பெரும்பாலும் இல்லாமை காரணமாகத்தான் வருகின்றது. அதாவது அமைதியின்மை. ஆரோக்கியமின்மை. அறிவின்மை, வேலையின்மை, உறவின்மை, செல்வமின்மை. இப்படி ஏதாவது ஒன்று. இல்லாமையால்தான் வருகிறது. இந்த இல்லாமைக்கு காரணத்தையும் அதைப் போக்கும் வழியினையும் மகாசித்தர் வள்ளுவப்பெருமான் கூறுகிறார்.

***இவர் பலராகிய காரணம் நோற்பார் சிலர்***

***பலர் நோவாதார்*** — ***நோற்பார் - தியானம் செய்கிறவர்***

அதாவது பெரும்பாலான மக்கள் தியானத்தை செய்யாமலிருப்பதுதான். இந்த இல்லாமைக்கு காரணம் என்று கூறுவதன் மூலம் தியானத்தை வலியுறுத்துகின்றார். மேலும்,

***வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்***

***ஈண்டு முயலப்படும்*** — ***செய்தவம் - தியானம்***

அதாவது தேவை எதுவாயினும் அதை விரும்பியவாறே அடையக்கூடிய ஆற்றலை தியானம் உங்களுக்கு தருவதால். தியானத்தை எப்படியாவது செய்யுங்கள் என்று கூறுகின்றார். துன்பங்கள் மட்டுமல்ல. வேண்டியது கிடைப்பது மட்டுமல்ல. இறப்பையும் (எமனையும்) நீங்கள் தடுக்க முடியும் என்று கூறுகிறார்.

***கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்***

***ஆற்றல் தலைப்பட்டவர்க்கு*** — ***நோற்றல் - தியானம்***

இப்படி தியானமானது மனிதர்களின் வாழ்க்கையின் பல்வேறு பிரச்னைகள் அனைத்திற்கும் அருமருந்தாய் இருக்கிறது.

15. சிறந்த குழந்தைகள் பிறக்கவும் பெண்கள் எளிதாக பிரசவம் யோகத்தில் வழிகள் உண்டா?

பெண்கள் கருவுருவதற்கு முன்பு ஆறுமாத காலமாவது யோகாசன பயிற்சியில் இருக்க வேண்டும். சிறுவயது முதல் பெண்கள் யோகா செய்து வருவது மிக மிக நல்லது. பின் கருவுற்றபின் இருமாதங்கள் வரை எளிய ஆசனங்கள் மட்டும் செய்ய வேண்டும். கர்ப்பிணிகள் நிறைய நடக்கவும் சுண்ணாம்பு சத்துள்ள பொருட்களையும் எளிதில் ஜீரணமாகிற உணவை மட்டும் சாப்பிட வேண்டும். தியானம் நீண்ட நேரம் செய்வது நல்லது. குழந்தை வளர்ந்துகொண்டு இருக்கும்போது, தாயின் எண்ணங்களும் உணர்வுகளும் செயல்களும் குழந்தையின் வளர்ச்சிக்குப் பயன் தரக்கூடியதாக இருக்கவேண்டும். கர்ப்பிணிகள் தங்கி இருக்கும் அறைகளில் நல்ல உருவத்தோற்றம் உடைய ஒழுக்கமுள்ள ஞானிகளின் திருஉருவப் படங்களும் அழகிய இயற்கை காட்சிகளும் இருப்பது மிக மிக நல்லது.

தாய்க்கு தோன்றும் ஒவ்வொரு எண்ணமும் அவள் வயிற்றில் இருக்கும் குழந்தையை பாதிக்க கூடியது. ஆன்மீகத்துறையில் புகழ்பெறக்கூடிய குழந்தை வேண்டுமானால் குழந்தை கருவில் இருக்கும்போது அதுபற்றிய எண்ணங்களும் உணர்ச்சிகளும் ஏற்படக்கூடிய நூல்களைப் படிக்க வேண்டும். அதைப் பற்றியே சிந்திக்க வேண்டும் டேப் ரிகார்டர் மூலமாக நல் இனிய பக்தி பாடல்களையும் ஆன்மீகத்தலைவர்களின் பேச்சையும் கேட்க வேண்டும். இசைத்துறையில் புகழ் பெற்ற குழந்தைகள் வேண்டுமானால் அடிக்கடி நல்ல இசையை கேட்கவும். இந்த எண்ணங்கள் குழந்தை நாம் விரும்புவது போல வளர்வதற்கு துணைபுரியும் சுகப்பிரசவமும் ஏற்படும். பிரசவத்தின்போது இயற்கையாக ஏற்படும். வலி கூட இருக்காது. கழிவு அறைக்குள் சென்று இயற்கை கடனை செய்துவிட்டு வந்தது போன்ற உணர்வுதான் இருக்கும். அவ்வளவு எளிதாக பிரசவம் அமையும்.

16. யோகாசனத்தில் உள்ள ரகஸ்யங்களை கூறுங்கள்.

எவ்வளவோ உள்ளன. ஓரிரு வரிகளில் சொல்லிட முடியாது. கடல்நீரை டம்ளரால் அளப்பது போன்றதாகும். முனிவர்கள் எல்லோரும் ஏராளமான மனைவியருடன் வாழ்ந்ததாக சரித்திரம் சொல்கிறது. அவர்களால் எப்படி முடிந்தது. போகத்திலும் அவர்கள் யோகம் பயின்றனர் விந்து விடாத்தன்மையில் மணிக்கணக்கில் ஏன் நாட்கணக்கில் கூட இருந்துள்ளனர். கோயில் கோபுரங்களில் உடலுறவு காட்சிகளைக் கொண்ட சிற்பங்களை வைத்துள்ளது கூட யோக ரகஸ்யத்தை கூறுவதேயாகும். சம்போகத்தில் இருவரின் மனமும் வெட்டவெளியில் அல்லது ஏதாவது ஒரு மகானின் உருவத்தை தியானத்தபடி இருக்கவும். இதன்மூலம் சீக்கிரம் விந்து வெளியாகாது. நல்ல குழந்தைகள் பிறக்கும்.

***உங்களைப் பற்றி ஒரு சில வரிகள்***

நடை நடக்கின்ற நேரம் தவிர மற்ற அனைத்து நேரமும் பத்மாசனத்திலேயே இருந்து பத்தாண்டு காலமாய் கின்னஸ் சாதனைக்காக பயிற்சி எடுத்து வருகின்றோம். 10 நூல்கள் எழுதியுள்ளோம். 5 நூல்கள் இந்து பதிப்பகத்திற்கு கொடுத்துவிட்டோம். மீத 5 நூல்களை வெளியிட விரும்பும் அன்பர்களை வரவேற்கிறோம்.


தையல் தொழிலில் 30 ஆண்டுகால அனுபவம் உண்டு. தையல் தொழில் செய்யும்போது கூட பத்மாசனத்திலேயே, அமர்ந்து வருகின்றோம். சின்னஞ்சிறு கட்டுரைகள் ஏராளம் எழுதியுள்ளோம்.

17. சில யோக நூல்கள் சிரசாசனம் மட்டும் போதும் என்கின்றனவே?

இது மாபெரும் மிகப்பெரிய தவறு. சிரசாசனம் செய்வது அவ்வளவு சுலபமானது அல்ல. சிரசாசனத்திற்கு முன்னாலும், பின்னாலும் சில ஆசனங்கள் செய்ய வேண்டும். திடீரென்று சிரசாசனம் செய்வதற்கு முயலக்கூடாது. சிரசாசனம் ஆசனங்களிலேயே மிக உச்ச நிலைக்கு உரிய ஆசனம். இதைத் திடீர் என்று செய்வது அபாயகரமானது. நல்ல ஆரோக்யமான நிலையில் இருப்பவர்களும் சாதாரண உடல்நிலையில் இருப்பவர்களும் சில யோகாசனப் புஸ்தகங்களைப் படிக்கிறார்கள். ”சுவற்றில் அரைமணி நேரம் சிரசாசனம் செய்தால் போதும் சுவர்க்கத்தின் தங்கச்சாவியே கிடைத்துவிடும் என்று எழுதியிருப்பதை படித்துவிட்டு செய்தவர்களின் நிலை பரிதாபகரமாய் இருக்கும். அவர்கள் கண்கள் செக்கச்செவேல் என்று வேதனையுடன் காட்சி அளிக்கும். கண்கள் முழுவதும் ரத்தம் பரவி இருக்கும். கட்டி ஏற்பட்டு அக்கட்டியை கரைக்க என்று வேதனைகள் அவசியமா? இதைப்போல அவதிப்பட்டதை பாண்டி மாநில அமைச்சர் ஒருவரே ஒத்துக்கொண்டார். ஆகவே ஆசிரியர் வைத்துப் பயிலவும்.



யூனியர் சாம்பர்-யோகா பயிற்சி முகாமில் ஆசிரியர்:ராம்பாஸ்கருடன்
ரவிசங்கர், கலையரசன், வேல்முருகன், தியாகராசன், ராசாராம், இராமன்



யோக ஆசிரியர்:ராம்பாஸ்கர்

# கனடாவில் பின்லாந்து-தேசிய காவியமான கலேவலா வெளியீட்டில் நூலாசிரியர் உரை!

மதிப்புக்குரிய தலைவர் அவர்களும் அவரைத் தொடர்ந்து இங்கு பேசிய அனைவரும் கலேவலா என்னும் இந்நூல்பற்றி நன்கு அலசியாராய்ந்து சிறப்பாக உரையாற்றினார்கள். எனவே கலேவலாவைப்பற்றியே நானும் வேறு வார்த்தைகளில் மீண்டும் சொல்வதிலும் பார்க்க, இந்த உன்னத காவியத்தை உலகுக்கு உவந்தளித்த பின்லாந்து நாட்டைப்பற்றியும் அந்த நாட்டு மக்களைப்பற்றியும் முதலில் சொல்லிப் பின்னர் கலேவலாவைப்பற்றிக் கொஞ்சம் தொட்டுப் பார்க்கலாம்.

பின்லாந்து ஐரோப்பாவின் வடகரையில் இருக்கிறது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் இந்தப் பகுதி முழுவதையும் பனிக்கட்டிப் பாளங்கள் மூடியிருந்தன. ஒரு காலத்தில் பனிக்கட்டிப் பாறைகள் உருகிக் கடலாகிப் பின்னொரு காலத்தில் தரைப் பகுதி மிதந்து மேலே வந்து நாடாயிற்று. இந்த நாட்டின் தரைப் பகுதி இன்னமும் மேலே மேலே வந்துகொண்டிருக்கிறது என்றுதான் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அதனால் இப்பொழுதும் வருடம் ஒன்றுக்கு ஏழு சதுர கி.மீ. அளவு இந்த நாடு வளர்ந்து கொண்டிருப்பதை இதற்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். நாடு வளர வளரத் துறைமுகப் பகுதியைக் கடலுக்குள் தள்ளிக்கொண்டு போகும் அனுபவத்தையும் இதற்குச் சான்றாகச் சொல்லுகிறார்கள்.

இந்த நாட்டின் கிழக்கில் ரஷ்யாவும் மேற்கில் சுவீடனும் வடக்கில் நோர்வேயும் அயல்நாடுகளாக இருக்கின்றன. தெற்கில் போல்டிக் கடல் இருக்கிறது. இந்த நாட்டின் காற்பங்கு வடதுருவ மண்டலத்தில் இருக்கிறது. பின்லாந்து ஐரோப்பாவிலேயே ஐந்தாவது பெரிய நாடு. ஆனால் மக்கள்தொகை மிகவும் குறைவு. நாடு முழுவதிலும் ஐம்பது லட்சம் பேர்தான் வாழ்கிறார்கள். இந்த நாட்டில் 65 சதவிகிதம் காடுகள்; 10 சதவிகிதம் ஏரிகளும் ஆறுகளும்.

பின்லாந்தின் காடுகளில் கரடிகள், கலைமான்கள் போன்ற பல வனவிலங்குகள் வசிக்கின்றன. ஒரு முறை நடைபெற்ற பொதுசனக் கருத்துக் கணிப்பின்படி கரடியை நாட்டின் தேசிய விலங்காகத் தெரிவு செய்தார்கள். இந்த நாட்டில் கரடிதான் காட்டுக்கு ராஜா. அந்த நாட்களில் கரடியைக் கொன்ற வேட்டைக்காரரைப் பாராட்டிப் பெரும்விழா எடுப்பதுண்டு. இந்நாட்டின் கதைகளிலும் நாடோடிப் பாடல்களிலும் கரடி பெரும் பங்கு வகிக்கிறது. இத்தகைய பெருமை வாய்ந்த கரடியார் இந்த நாட்டின் தேசிய காவியமான கலேவலாவிலும் வருகிறார்.

பின்லாந்தில் அடர்ந்த காடுகள் நிறைய இருக்கின்றன. ஐரோப்பாவிலேயே அதிக காடுகள் உள்ள நாடு பின்லாந்துதான். இந்தக் காட்டுவளம் பலவித உயர்தரமான காகிதங்கள், கப்பல்கள், படகுகள், மரவீடுகள் போன்றவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துகிறது. நாட்டின் முன்னேற்றத்துக்கு மூலாதாரமாக இருக்கும் இந்தக் காட்டுவளத்தைப் "பசும் பொன்" (green gold) என்று இங்கே வர்ணிக்கிறார்கள்.

பின்லாந்தில் ஆயிரக் கணக்கான ஏரிகள் இருக்கின்றன. கிழக்கிலுள்ள ஸைமா ஏரி 443 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. இந்தப் பெரிய ஏரியுடன் வேறு பல ஏரிகளையும் இணைத்து Saimaa Lake System என்னும் ஸைமா ஏரித் திட்டம் அமைக்கப்பட்டது. இதன் வழியாக ஒருவர் நாட்டுக்குள்ளேயே 200 மைல் தூரம் நீராவிப் படகில் பயணிக்க முடியும்.

இந்த நாட்டின் ஒரு பகுதி வடதுருவ மண்டலத்துள் இருக்கிறது. அந்தப் பகுதியை "நள்ளிரவுச் சூரிய பூமி" என்று அழைப்பர். இந்தப் பகுதியில் மே மாத மத்தியிலிருந்து ஜூலை மாத மத்திவரைக்கும் சூரியன் மறைவதேயில்லை. ஜூன் மாதக் கடைசியில் நள்ளிரவில் சூரியனைப் பார்ப்பதற்காகப் பல நாடுகளிலிருந்தும் வட பின்லாந்தில் உல்லாசப் பயணிகள் திரளுவார்கள்.



ஆசிரியர், தமிழர் தகவல்
எஸ். திருச்செல்வம்



கவிஞர் கந்தவனம்
தலைமையுரை



பவானி தயாளன் வரவேற்புரை



பின்லாந்தின் பிரதிநிதி
மார்கெறற்றா பார்த்தனென்



Dr. Börje Vähämäki



லோகேந்திரலிங்கம்
ஆசிரியர், உதயன்

குளிர் காலம் இதற்கு எதிர்மாறாக இருக்கும். வடக்கில் இரண்டு மாதங்களுக்குச் சூரியன் உதிப்பதேயில்லை. ஒரு காலத்தில் தென் பின்லாந்தில்கூட பகற்பொழுது மிகவும் குறைவாகவே இருக்கும். சில நாட்களில் 2 - 3 மணித்தியாலங்களே வெய்யில் அல்லது வெளிச்சம் இருக்கும். குளிர் காலத்தில் காலநிலை - 5ல் இருந்து - 40 வரை வருவது சாதாரணம். நவீன வசதிகள் வந்துவிட்ட இந்தக் காலத்தில் மக்கள் குளிர் காலத்தை விரும்புகிறார்கள். விரும்பி அனுபவித்து மகிழ்கிறார்கள். பனிக்கட்டியில் சறுக்குதல், வழுக்கிப் பாய்தல் போன்ற விளையாட்டுக்களையும் பனிப்பாறையைத் துளைத்து மீன்பிடித்தல், உறைந்த ஏரிகளின் மேல் கார்ச் சவாரிப் போட்டிகள் நடாத்துதல் ஆகியவற்றில் விரும்பி ஈடுபடுகிறார்கள்.

குளிர் காலத்தில் கடலும் ஏரிகளும் உறைந்து கற்பாறைபோலக் கடினமாக இருக்கும். அந்தக் காலத்தில் ஏரியின்மேல் நடந்தோ அல்லது காரிலோ அக்கரைக்குப் போய்விடலாம். ஆனால் குளிர் குறைந்து பனிக்கட்டி இளகத் தொடங்கும் காலங்களில் இப்படியான பயணங்கள் ஆபத்தானவை. இடைநடுவில் இளகிய பனிக்கட்டி இருந்து, அது உடைந்துவிட்டால் அடியிலுள்ள குளிர் நீரில் ஆள் அமிழ்ந்துவிடுவார். வேடிக்கையாக ஒரு கதை சொல்வார்கள். ஒரு கணவன் தன் மனைவியை ஏரியின் மேல் நடந்து சென்று அக்கரையில் இருந்த கடையில் கொஞ்சம் சிகரெட் வாங்கி வரும்படி அனுப்பினானாம். பத்துப் பதினைந்து ரூபா பெறுமதியான பொருள்தான். கடைக்காரனுக்கு மனைவியிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பினான். கடிதத்தில் இப்படி எழுதியிருந்தான். "கடைக்கார நண்பரே, என் மனைவியிடம் இரண்டு பக்கற் சிகரெட் கொடுத்தனுப்பவும். அவளிடம் நான் காசு கொடுத்தனுப்பவில்லை. ஏனென்றால் பனிக்கட்டி இளகத் தொடங்கிவிட்டது." அதாவது பனிக்கட்டி உடைந்து மனைவி ஏரிக்குள் மூழ்கிவிட்டால் அந்தப் பத்துப் பதினைந்து ரூபாவும் போய்விடுமே!

குளிர் காலத்தையடுத்து இலையுதிர் காலம் தொடங்கும். இதுதான் மிகவும் அழகான பருவகாலம். ஊசியிலை மரங்களின் இலைகள் அனைத்தும் செந்நிறமாய்ப் பொன்னிறமாய் மாறி மரமே ஒரு பொற்சுடராய் பொலியும். அந்த நாட்களில் காடுகளுக்குள் போய்ப் பார்த்தால், மரங்களெல்லாம் மஞ்சள்மயமாய் மாறியிருப்பதும் தரை நிறையச் சிவந்த சிறு பழங்கள் கனிந்து சிவப்புக் கம்பளம் விரித்ததுபோலப் பரந்திருப்பதும் ஆங்காங்கு நடுநடுவே பொட்டு வைத்தாற்போல மஞ்சள் காளான்கள் முளைத்திருப்பதும் மனோரம்மியமான காட்சியாக இருக்கும்.

Toivo Pekkanen என்ற பின்னிஷ் எழுத்தாளர் இந்த நாட்டின் பருவ காலங்களைப்பற்றி இப்படிச் சொன்னார்: "வருடத்தில் குளிர்காலமே உண்மையானது. வசந்தம் என்பது ஒரு வாக்குறுதி. கோடை என்பது ஒரு மாயை. பனிமழையும் பனிக்கட்டியும் குளிரும்தாம் எங்கள் இயற்கையோடு இணைந்தவை. குளிர்காலம் என்றுமே எங்களைக் கைவிட்டதில்லை. அதன் வருகை சத்தியமானது."

இந்த நாட்டில் பேசப்படும் பின்னிஷ் மொழியானது அயல்நாடுகளான நோர்வே, சுவீடன், ரஷ்யாவின் மொழிகளோடு தொடர்பில்லாத தனித்துவம் வாய்ந்தது. ஐரோப்பாவில் பெருமளவில் பேசப்படும் எந்த மொழியுடனும் சம்பந்தப்படாதது. பின்னிஷ் மொழி Finno - Ugric மொழிக் குடும்பத்தின் Balto - Finnic கிளையைச் சேர்ந்தது. Estonia, Karelia, Votic, Livonian மொழிகளுடன் நெருங்கிய தொடர்பும் ஹங்கேரிய மொழியுடன் தூரத் தொடர்புமுடையது. இந்த மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இருக்கக்கூடிய ஒற்றுமைகள் பற்றி பேராசிரியர் அஸ்கோ பார்பொலா இந்நூலின் முன்னுரையில் ஆராய்ந்திருக்கிறார். பின்னிஷ் மொழி இலக்கணத்தில் இறந்த காலம் நிகழ் காலம் மட்டுமே இருக்கின்றன; எதிர்காலம் இல்லை. நிகழ்கால அமைப்பே எதிர்காலத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், பின்னிஷ் இலக்கணத்தில் ஆண்பால் பெண்பால் இல்லை. "அவர்" என்பதுபோன்ற பொதுவான ஒன்றன்பாலும் "அவர்கள்" என்பதுபோன்ற பொதுவான பலவின்பாலும்தாம் இருக்கின்றன. "அவர்" என்று எழுத்திலாவது பேச்சிலாவது வந்தால், அந்த "அவர்" ஆணா பெண்ணா என்பதைச் சந்தர்ப்பத்தைப் பொறுத்து, பெயரைப்பொறுத்து, அர்த்தத்தைப் பொறுத்து, ஆளைப் பொறுத்து, ஆடையைப் பொறுத்து அறிந்துகொள்ள வேண்டியதுதான். தமிழ் இலக்கணத்தில் எட்டு வேற்றுமைகளும் வேற்றுமை உருபுகளும் இருப்பது போல பின்னிஷ் மொழியிலும் பதினாறு வேற்றுமைகளும் வேற்றுமை உருபுகளும் இருக்கின்றன. இப்படியாகப் பின்னிஷ் மொழி பிறமொழி களோடு சில ஒற்றுமைகளையும் சில வேற்றுமைகளையும் கொண்டது.

பின்லாந்தில் வாழும் மக்களில் 94 விகிதத்தினர் பின்னிஷ் மொழி பேசுபவர்கள். மிகுதி 6 விகிதத்தினர் சுவீடிஷ் மொழி பேசுபவர்கள். அதாவது, நாடு முழுவதிலும் வாழ்கின்ற ஐம்பது லட்சம் மக்களில் மூன்று லட்சம் பேர் மட்டுமே சுவீடன் மொழி பேசுபவர்கள். ஆனால் இரு மொழிகளுமே இங்கு தேசிய மொழிகளாகும். இந்தச் சிறுபான்மையினரின் உரிமைகள் நாட்டின் அரசியல் அமைப்பில் சட்டரீதியாக உண்மையாகவே பாதுகாக்கப்படுகின்றன. அனைவரும் சமத்துவமாய் எந்தக் குறையுமின்றி மனநிறைவுடன் வாழ்கின்றனர்.

பின்னிஷ் மொழியைப் பேசுபவர்கள் பின்னிஷ் மொழியையும், சுவிடிஷ் மொழியைப் பேசுபவர்கள் சுவீடிஷ் மொழியையும் தாய் மொழியாக அதாவது முதல் மொழியாகக் கல்வி கற்கலாம். அடுத்த தேசிய மொழியையும் ஏனைய ஐரோப்பிய மொழிகளையும் இரண்டாம் மூன்றாம் நான்காம் மொழிகளாகக் கற்கும் வாய்ப்பு இருக்கிறது. பல்கலைகழகக் கல்வியை முடிக்கும்வரை அங்கே இலவசக் கல்வித் திட்டம் அமுலில் இருக்கிறது என்பது ஒரு சிறப்பான உவப்பான செய்தி. பின்லாந்தில் 100 சதவிகிதத்தினர் கல்வியறிவுடையவர்கள். இவர்களில் அனேகர் உயர்கல்வியை முடித்தவர்கள்.

எந்த ஒரு பின்லாந்தியரையாவது, "உங்களுடைய நாட்டில், உங்களுடைய வாழ்க்கையில், உங்களுடைய பாரம்பரியப் பழக்க வழக்கங்களில், உங்களுடைய கலாச்சாரத்தில் மிகச் சிறந்த அம்சமென எதைக் கூறுவீர்கள்?" என்று கேட்டால், உடனே வரக்கூடிய ஒரே பதில் "சவுனா" (sauna) என்பதுதான். சவுனா என்ற இந்தச் சொல் ஒரு பழைய பின்னிஷ் சொல்லிலிருந்து வந்த வார்த்தை. குளியலறை என்று பொருள். ஒரு பின்லாந்தியருக்கு இது ஒரு சாதாரண குளியலறையல்ல. அதற்குமேல் அனேக அர்த்தங்கள் கொண்டது. வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பிறப்பிலிருந்து இறப்புவரை இரண்டறக் கலந்தது.

சவுனா என்பது ஒரு நீராவிக் குளியல். அந்தக் காலத்தில், ஏன், கிராமப் புறங்களில் இன்றைக்கும்கூட, மரத்தினாலேயே கூரையும் சுவர்களும் தளமும் கட்டிய வீடு போன்று ஒரு குடிலைக் கட்டி, உள்ளே ஆட்கள் அமர்வதற்கு அடுக்கடுக்காய் வாங்குகளைப் போட்டு, ஓரிடத்தில் அடுப்பில் பெரிய வட்டக் கற்களைப் பரப்பி, அடுப்புக்குள் விறகுகளை எரித்துக் குடிலுக்குள் வெப்பத்தைப்பரவச் செய்வார்கள்.

கற்கள் கனன்று குடிசைக்குள்ளே நீராவி வியாபித்திருக்கையில், நீராவிக் குளியலுக்குக் குடிலுக்குள்ளே போவார்கள். தேவைப்படின் கனலும் கற்களில் இடையிடையே தண்ணீரை எற்றி வெப்பத்தை அதிகப்படுத்தலாம். உடல் முழுவதிலும் வெயர்வை வெளிப்படுவதன் மூலம் உடல் சுத்தப்படுத்தப்படுகிறது. சவுனாவில் இருக்கும்போது birch எனப்படும் மிலாறுவின் பசுமையான சிறிய இலைக் கட்டுகளால் உடலைத் தட்டிக் கொடுப்பதால் இரத்த ஓட்டம் சமன்படும் என்கிறார்கள். வெயர்வை அதிகமானதும் தனியாக இருக்கும் சாதாரண குளியலறைக்கு வந்து தோய்ந்து அல்லது ஏரியில் நீந்தி வெயர்வையைக் கழுவிவிட்டு மீண்டும் சவுனாக் குடிலுக்குள் வருவார்கள். இப்படி மீண்டும் மீண்டும் நிகழும். அந்த நாட்களில் இத்தகைய சவுனாக் குடில்களை ஏரிக்கரைகளில் அமைப்பது ஒரு பாரம்பரியப் பண்பாடு.

இந்தச் சவுனாக் குளியல் அரக்கப்பரக்கச் செய்து முடிக்கிற அவசர வேலையல்ல. இந்நாட்டு மக்களின் நோக்கில் அது ஒரு சம்பிரதாயமுமல்ல. அது உடல் நலத்துக்கான, உள்ள நலத்துக்கான ஒரு சடங்கு. சவுனாவில் அமர்ந்திருப்பது தியானம் செய்வதற்குச் சமம் என்கிறார்கள். இது ஒரு தவத்துக்குச் சமம் ஒரு வேள்விக்குச் சமம் என்பது முதியோர் வாக்கு. கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தில், இறந்தவர்கள் இந்தச் சவுனாக் குடிலுக்கு வருவார்கள் என்றும் அவர்களை வழிபடும் ஒரு புனித இடமாகவும் இது கருதப்பட்டது. அங்கு எழுந்து வியாபிக்கும் நீராவியை மரணித்த மூதாதையரின் ஆவியுடன் சம்பந்தப்படுத்திப் பார்த்தார்கள். நெருப்பைப் பூசனைக்குரியது என்றும் நெருப்பையும் வெப்பத்தையும் தரும் அந்தச் சவுனா அடுப்பையும் கற்களையும் தேவ சந்நிதானம் என்றும் எண்ணினார்கள். சவுனாவில் இருக்கும்போது ஒரு தேவாலயத்தில் இருப்பதுபோல ஒழுக வேண்டும் என்பார்கள். வட பின்லாந்தின் சில பகுதிகளில் minus 50 வரை குளிர் வருவதுண்டு. மின்சார வசதியில்லாத அந்த நாட்களில் அக்னியின் அர்த்தத்தையும் அக்னியின் அருமையையும் எவ்வளவு தூரம் உணர்ந்திருப்பார்கள் என்பது சிந்தனைக்குரியது. அந்த நாட்களில் சுகப்பிரசவங்கள் எல்லாம் சவுனாவில் நிகழ்ந்தன. நோயாளிகள் குணமடைவதற்காகச் சவுனாக் குடிலுக்குள் கொண்டு போகப்பட்டார்கள்.

இப்போது கட்டப்படும் வீடுகளில் படுக்கையறை, சமையலறை, குளியலறை என்பதுபோல சவுனா அறையையும் சேர்த்துக் கட்டுவது வழக்கமாகிவிட்டது. அதேநேரத்தில் இப்பொழுது நகர்ப் புறங்களில் சவுனா அறைகள் மின்சாரத்தால் வெப்பமாக்கப்படுகின்றன. ஆனால் இன்னமும் கிராமப் புறங்களில் விறகெரித்து வெப்பமூட்டும் மரக்குடில் சவுனாவுக்கு நிகர் எதுவுமே இல்லை என்பது இவர்களுடைய ஏகோபித்த கருத்து.

உண்மையாக எழுதப்பட்ட பின்லாந்தின் வரலாறு சுவீடனால் பின்லாந்து கைப்பற்றப்பட்ட 12ம் நூற்றாண்டில்தான் ஆரம்பமாகிறது. பின்லாந்து சுவீடனின் ஆட்சியில் 800 வருடங்கள் இருந்தது. அதன் பின்னர் பின்லாந்து ரஷ்யாவின் ஆட்சிக்குப் போய் 1917ல் சுதந்திரம் பெற்றது. பின்லாந்தில் ஆயிரக் கணக்கான தீவுகள் இருக்கின்றன. அவற்றில் மிகப் பெரிய தீவுகள் என்ற கணக்கில் எனது கவனத்தைக் கவர்ந்த ஒரு தீவுக் கூட்டத்தைப்பற்றி மட்டும் இங்கு சொல்கிறேன்.

அந்தத் தீவுக் கூட்டத்தின் பெயர் ஆலண்ட்ஸ் தீவுகள் (The Åland Islands). இது பின்லாந்தைச் சேர்ந்த ஒரு மாகாணம். இந்தத் தீவுக் கூட்டம் போல்டிக் கடலில் சுவீடனுக்கும் பின்லாந்துக்கும் இடைநடுவில் Gulf of Bothniaவின் நுழைவாயிலில் இருக்கிறது. இந்த மாகாணத்தில் சுமார் ஏழாயிரம் தீவுகள் இருக்கின்றன. ஆனால் நூறுக்கும் குறைந்த தீவுகளிலேயே மக்கள் வாழ்கிறார்கள். 581 சதுர மைல் (1505 சதுரக் கி.மீ) பரப்பளவு கொண்ட இத்தீவுகளின் மக்கள்தொகை 23,754 என்று 1988ம் ஆண்டுக் கணக்கெடுப்புக் கூறுகிறது. இந்த மாகாணம் பின்லாந்து நாட்டைச் சேர்ந்ததாக இருந்தாலும் சுவீடனுக்கு அருகில் இருப்பதாலும் சுவீடனின் காலனியாக ஒரு காலத்தில் இருந்ததாலும் அந்தத் தீவு மக்கள் அனைவரும் சுவீடன் மொழியைப் பேசுவதோடு சுவீடனின் பழக்க வழக்கங்கள் கலாச்சாரங்களையே முற்றுமுழுதாகப் பின்பற்றுகிறார்கள். அதனால், பின்லாந்து 1917ல் சுதந்திரம் பெற்றபோது, ஆலண்ட் தீவுகள் பின்லாந்திலிருந்து பிரிந்து சுவீடன் நாட்டுடன் இணையப் பிரியப்பட்டது. அந்த ஆலண்ட் தீவுகளின் மக்களுக்கு ஆதரவாகச் சுவீடன் ராணுவத்தையே அனுப்பியது. ஆனால் அதைப் பின்லாந்து எதிர்த்தது. இந்தப் பிரச்சினைக்கு 1921ல் League of Nations ஒரு தீர்வு கண்டது. அதன்படி ஆலண்ட தீவுகள் பின்லாந்தைச் சேர்ந்த, முக்கிய உத்தரவாதங்கள் வழங்கப்பட்ட மாகாணமாக ஆக்கப்பட்டது. பின்னர் 1952ல் தன்னாட்சி பெற்ற மாகாணமாகச் சட்டரீதியாக அங்கீகாரம் பெற்றது. அந்தச் சட்டவிதிகளின்படி அவர்கள் தமது உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆட்சிச் சபையை அமைத்துத் தம்மை தாமே ஆளுகின்றனர். சுவீடிஷ் மொழியே மாகாண ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டது. 1970ல் தங்களுக்கெனத் தனிக் கொடியை உண்டாக்கினார்கள். பிரதேச நிகழ்ச்சிகளில் நோர்டிக் நாடுகளின் கொடிகளுடன் இந்தக் கொடியையும் பறக்கவிடும் மதிப்பைப் பெற்றார்கள். தங்களுக்கெனத் தனியான தபால்தலைகளை அச்சிடும் உரிமை பெற்றார்கள். பின்லாந்தின் சட்டமான கட்டாய இராணுவப் பயிற்சிக்கு விதிவிலக்குப் பெற்றார்கள். அதே நேரத்தில் அந்தத் தீவுகளின் உறுப்பினர் ஒருவர் பின்லாந்தின் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார். இந்தத் தீவை அமைதித் தீவு என்றும் அழைப்பதுண்டு.

அன்னிய ஆட்சியில் இருந்த காலத்தில் பின்லாந்து மக்கள் தமது தேசிய அடையாளத்தைத் தேடக்கூடிய, அடையக்கூடிய ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியவர்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்விமான்களாவர். பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருந்த வாய்மொழிப் பாடல்கள் மக்களுக்கு மன எழுச்சியையும் ஆக்க சக்தியையும் கொடுத்தன. அவற்றில் கலேவலா முதன்மையானது. கலேவலா பின்லாந்து நாட்டின் தேசிய காவியம். இலக்கிய அறிஞர்கள் இந்த உன்னத காவியத்தை உலகளாவிய இலக்கியம் என்ற வரிசையில் உயர்த்தி வைத்து போற்றுகின்றனர்.
எலியாஸ லொண்ரொத் என்னும் பேரறிஞர் கலேவலாவைத் தொகுத்து வெளியிட்டார். ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவர் தனது சுயமுற்சியினால் ஒரு மருத்துவப் பட்டதாரியாகிப் பின்னர் பின்னிஷ் மொழிப் பேராசிரியருமானார். இவர் பல பயணங்களில் கிராமம் கிராமமாகக் வீடு வீடாக அலைந்து திரிந்து வாய்மொழிப் பாடல்களாக இருந்த நாடோடிப் பாடல்களை மக்களைப் பாட வைத்துக் குறிப்பெடுத்துத் திருத்தி இணைத்துப் பொருத்தி ஒரு மகத்தான காவியமாகக் கலே வலாவை வெளியிட்டார். இவருடைய இன்னொரு காலத்தை வென்று நிற்கும் வெளியீடு "கந்தலேதார்" (Kanteletar) என்னும் இசைநுலாகும். "கந்தலே" என்பது ஐந்து தந்திகள் கொண்ட முழங்காலில் வைத்து விரல்களால் மீட்டப்படும் யாழ்வகை நரம்பிசைக்கருவி. இந்த இசைநூலான "கந்தலேதார்" என்பதை "யாழ்மகள்" என்று அல்லது "யாழின் சக்தி" என்று தமிழில் சொல்லலாம். இதுவும் நாடோடிப் பாடல்களின் தொகுப்பு.
இந்தப் பிரபஞ்சம் எப்படித் தோன்றியிருக்கும்? வேதங்கள் ஒன்றைச் சொல்லும். புராணங்கள் இன்னொன்றைச் சொல்லும். புனைகதைகள் பலகதைகள் சொல்லும். பின்லாந்தின் தேசிய காவியமான கலேவலாவும் ஒரு கதை சொல்லுகிறது. அதைப் பின்லாந்து மக்கள் மதிக்கிறார்கள்.

கலேவலாவின்படி ஆதியில் கடல் இருந்தது. கடல் மட்டும்தான் இருந்தது. மேலே வானம் இருந்தது. வானத்து வெட்டவெளியில் ஒரு பெண் இருந்தாள். அவள் காற்றின் மகள். வானவெளிவாசம் அலுத்துப் போனதால், அவள் கடலுக்குள் இறங்கினாள். காற்றும் கடலலையும் அலைக்கழித்ததால் அந்தக் கன்னி கர்ப்பமானாள். அதனால் அவள் கடலன்னை நீரன்னை என்னும் பெயர்களையும் பெற்றாள்.

ஒருநாள் ஒரு பிரமாண்டமான வாத்து எங்கிருந்தோ வந்தது. அது நீரன்னையின் முழங்காலில் கூடு கட்டி ஆறு தங்க முட்டைகளையும் ஓர் இரும்பு முட்டையையும் இட்டு அடைகாத்தது. அடைகாக்கும்போது ஏற்பட்ட சூட்டைத் தாங்க முடியாமல் நீரன்னை முழங்காலை உலுப்பினாள். முட்டைகள் உருண்டு உடைந்து சிதறின. உடைந்த ஒரு முட்டையின் மேற்பாதி சுவர்க்கமாகி மேலே எழுந்ததாம். கீழ்ப்பாதி பூமியாகிக் கீழே நின்றதாம். மஞ்சள் கருவது மங்கள சூரியனாய் மாறி மலர்ந்ததாம். வெள்ளைக் கரு வெண்ணிலவாக வானத்தில் வந்ததாம். இவ்விதமாகச் சிதறிய முட்டைகளின் மற்றச் சிதைவுகளிலிருந்து முகில்களும் நட்சத்திரங்களும் ஏனையனவும் தோன்றிப் பிரபஞ்சம் பிறந்தது. பின்னர் நீரன்னை தானே மேடுகளையும் பள்ளங்களையும்

மலைகளையும் மடுக்களையும் தீவுகளையும் திடல்களையும் கரைகளையும் குடாக்களையும் படைத்தாள் என்கிறது கலேவலா.

இவ்வளவுக்கும் இந்த காவியமான கலேவலாவின் நாயகன் வைனாமொயினன் நீரன்னையான கன்னியின் கர்ப்பத்திலேயே முப்பது கோடையும் முப்பது குளிர் காலமும் இருந்தான். இவ்வளவு நீண்ட காலம் கர்ப்பத்தில் இருந்ததால், அவன் பிறக்கும்போதே முதியவன் என்னும் சிறப்பையும் ஞானி என்ற மதிப்பையும் பெற்றான். இந்த வைனாமொயினன் அனைத்தும் அறிந்த அறிஞன். இசையில் வல்ல இசைப் பேரறிஞன். போரில் சிறந்த போர்வீரன். பாடல்களை இயற்றிப் பாடும் சக்தி படைத்த பாடகன். முதன்முதலாக ஒரு கப்பலைக் கட்டியவன் இவனே. முதன்முதலாக ஒரு யாழைச் செய்து, அதன் இசையால் இயற்கையையே வசப்படுத்தியவனும் இவனே. மொத்தத்தில் இவன் பின்லாந்துக்குக் கலேவலா தந்த கலாச்சார நாயகன்.
தேவசிற்பி இல்மரினன், குறும்பன் லெம்மின்கைனன, தானே தனது உயிரை மாய்த்துக்கொண்ட குல்லர்வோ, வடநிலத் தலைவி லொவ்ஹி, அவளுடைய அழகான மகள் ஆகியோர் இக்காவியத்தின் ஏனைய நாயகர்களாவார்.

கலேவலா என்ற இந்தக் காவியத்தில் நான்கு சிறப்பம்சங்கள் இருப்பதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். இதிகாசத்துக்குரிய அனைத்து இலட்சணமும் இதில் இருப்பது ஒன்று. இசைக் காவியமாக அமைந்திருப்பது இன்னொன்று. ஒரு சமூகத்துக்கான சடங்குமுறைகளைக் கூறுவது மூன்றாவது. மந்திரங்களின் மகத்துவங்கள் மண்டிக் கிடப்பது மற்றொன்று. இந்தக் காவியம் இந்நாட்டு எழுத்தாளர்கள், ஓவியர்கள், இசை சிற்பக் கலைஞர்களின் உணர்வுகளையும் மீட்டியிருக்கிறது. கலேவலாவில் வரும் சில சம்பவங்களையும் பாத்திரங்களையும் அடிப்படையாக வைத்து அனேக கதைகள் நாவல்கள் நாடகங்கள் சிற்பங்கள் ஓவியங்கள் பிற்காலத்தில் படைக்கப்பட்டன. 1994ல் வெளிவந்த "கலேவலா" வின் செய்யுள் நடைத் தமிழாக்கத்தில் பிரசுரமான பத்து வர்ணப் படங்களும் இந்த "உரைநடையில் கலேவலா"வின் அட்டையை அலங்கரிக்கும் வர்ணப் படமும் பின்லாந்தின் தலைசிறந்த ஓவியர்களில் ஒருவரான அக்செலி கல லேன் - கல்லேல (Akseli Gallen-Kallela) என்பாரது அமரத்துவப் படைப்புகளில் சிலவாகும் . கலேவலாவின் அடிப்படையில் முன்னூறுக்கு மேற்பட்ட இசைப் பாடல்களும் அமைக்கப்பட்டன.
பின்லாந்து மக்களின் கலாச்சாரத்துக்கு அத்திவாரமாக அமைந்த கலேவலாவின் பாடலமைப்பு உலகக் கவிஞர்களின் கவனத்தையும் ஈர்த்தது. 1852ல் ஸ்க்கெய்ப்னர் (Schiefner) வெளியிட்ட கலேவலாவின் ஜேர்மன் மொழியாக்கத்தை அடியொற்றியே அமெரிக்கக் கவிஞரான Henry Wadsworth Longfellow என்பார் "The Songs of Hiawatha" வை கலேவலாவின் சந்த அமைப்பில் 1855ல் வெளியிட்டார்.

கலேவலா என்னும் இக்காவியத்தில் ஆங்காங்கு நகைச்சுவைக்கும் பஞ்சமில்லை. ஒரே யொரு சம்பவத்தை மட்டும் இங்கு சொல்லகிறேன். லெம்மின்கைனன் என்பான் பலகால முயற்சியின் பின்னர் குயிலிக்கி என்ற பெண்ணைப் பலவந்தமாகக் கடத்தி வருகிறான். வழியில் அவர்கள் சமாதானமாகி விவாகம் செய்யத் தீர்மானிக்கிறார்கள். வீட்டுக்கு வந்ததும் லெம்மின்கைனன் தாயிடம், "அம்மா, நான் தேடிப் போன பெண்ணைக் கொண்டுவந்துவிட்டேன்" என்கிறான். அதற்குத் தாய், "ஆண்டவரே, அடுப்பு மூட்ட எனக்கு ஓர் அரியவளைத் தந்தீரே! ஆடைகளைத் தோய்த்து அழகாக மடித்து வைக்க ஓர் ஆசை மருமகளைத் தந்தீரே! நன்றியையா!" என்கிறாள்.

பொதுவாகவே பின்லாந்து மக்கள் நகைச்சுவையுணர்வு உடையவர்கள். இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஒருவரைப்பற்றி ஒரு உண்மைக்கதை சொல்வார்கள் (Urho Kekkonen) மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அவர் நீண்ட காலம் ஜனாதிபதியாகக் கடமையாற்றிய பின்னர் உடல்நலக் குறைவினால் ஓய்வு பெற்றுப் பின்னர் காலமாகிவிட்டார். அவர் ஜனாதிபதியாகப் பதவியில் இருந்த காலத்தில் ஒரு முறை கிராமப் புறங்களைச் சுற்றிப் பார்க்க விரும்பினார். இது ஒரு பெரிய நாடு. வெகுதூரம் பயணம் செய்த பின்னர்தான் சில வீடுகள் உள்ள ஒரு கிராமம் வரும். அதிலிருந்து வெகு தூரம் சென்ற பின்னர்தான் அடுத்த கிராமம் வரும். அதனால் வழியில் எங்காவது தங்கிக் கோப்பி தேனீர் அருந்தி இளைப்பாறிச் செல்வதென்று ஜனாதிபதியின் அதிகாரிகள் தீர்மானித்தார்கள். தங்கள் விருப்பத்தை ஒரு கிராமத்தில் ஒரு முதியவரும் முதிய பெண்மணியும் மட்டும் வாழ்ந்த ஒரு வீட்டில் சொன்னார்கள். கிராமத்தவர் போய் ஜனாதிபதியைப் பார்ப்பதே முடியாத காரியம். ஜனாதிபதியே கிராமத்து வீட்டுக்கு வருகிறார் என்றால் எப்படி இருக்கும்? அந்த முதியவரும் முதியவளும் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

ஜனாதிபதியும் குழுவினரும் வந்தார்கள். முதியவரின் வீட்டில் ஒரு மேசையில் அழகான மேசைவிரிப்பு விரித்து, அதன்மேல் கோப்பி, தேனீர், சிற்றுண்டி வகைகளை வைத்திருந்தார்கள். ஜனாதிபதி கோப்பியைத் தனது கப்பில் ஊற்றும்போது கொஞ்சம் மேசைவிரிப்பில் சிந்துப்பட்டுவிட்டது. ஜனாதிபதி பதறிவிட்டார். "ஐய்யோ, என்ன வேலை பார்த்துவிட்டேன். ஓர் அழகான மேசைவிரிப்பு அநியாயமாகப் போய் விட்டதே"என்றார்.

முதிய பெண்மணி ஓடிவந்தாள். "பரவாயில்லைப் பரவாயில்லை. யாரும் வேண்டுமென்றே செய்வார்களா? தற்செயலாக நடந்ததுதானே அதிலொன்றிமில்லை" என்றாள்.

எல்லோரும் கோப்பியை எடுத்த பின்னர் கடைசியாகக் கோப்பிக்கு வந்தவர், அந்த வீட்டுக்கார முதியவர் - அதாவது முதிய பெண்ணின் கணவர். அவர் தனது கப்பில் ஊற்றும்போதும் கொஞ்சக் கோப்பி மேசைவிரிப்பில் சிந்திவிட்டது. இப்பொழுது முதிய பெண்ணுக்குக் கடும் கோபம் வந்துவிட்டது. வார்த்தைகள் சட்டென்று வந்து வீழ்ந்துவிட்டன. "இங்கே பார் மற்ற முட்டாளை" என்றாள். "இங்கே பார் ஒரு முட்டாளை" என்று சொல்லவில்லை. உணர்ச்சிவசப் பட்டவளாய் அவசரத்தில் "இங்கே பார் மற்ற - மற்ற - முட்டாளை" என்றுவிட்டாள்.

அவளுடைய வார்த்தைகளை யாரும் கவனித்தாகத் தெரியவில்லை. எல்லாம் திருப்தியாக முடிந்து ஜனாதிபதியும் குழுவினரும் நன்றி கூறி விடைபெற்றுப் போய்விட்டார்கள்.

அடுத்த வாரம் அந்தப் பெண்மணிக்குத் தபாலில் ஒரு பார்சல் வந்தது. பார்சல் உறையில் அனுப்பியவரின் பெயர் விலாசம் எதுவும் இல்லாமல் மொட்டையாக இருந்தது. பிரித்துப் பார்த்தால் உள்ளே ஒரு விலையுயர்ந்த புதிய மேசைவிரிப்பு! அதனுடன் இருந்த ஒரு சிறிய காகிதத்தில் ஒரு வரி மட்டும் இப்படி எழுதியிருந்தது: "இது அந்த முதலாவது முட்டாளிடமிருந்து."

குழந்தை வயிற்றில் இருக்கும்போதே பெயர் வைத்ததுபோல, இந்த நூல் அச்சுக்குப் போவதற்கு முன்னரே இதற்கு அறிமுக விழா றொறன்ரோவில்தான் என்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவரும் இங்கே தலைமை வகிப்பவருமான கவிஞர் கந்தவனம் அவர்கள் தீர்மானித்துவிட்டார். இது அவருடைய ஒரு வருட கால அயராத உழைப்பு. அவர் இந்த விழாவுக்காக எடுத்த முயற்சிகளையும் செலவழித்த நேரத்தையும் அறிவேன். அவருக்கும் இவ்விழாவுக்கு உழைத்த இணையத்தின் ஏனைய உறுப்பினருக்கும் உரையாற்றிய அறிஞர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டிருக் கிறேன்.



திருச்சி:நாம் தமிழர்இயக்க நூல்விழாவில் உணர்ச்சிகவிஞர்:சிங்காரவேலன்,நடிகை வைஜயந்திமாலாவுக்கு நூல்வழங்கல்:அருகே: சென்னை இசைகழக-செயலர்:நந்தினி ரமணி




பி.பி.சி.தமிழோசை சேவைக்கு எம்வாழ்த்துக்கள்!




இரா.இரவிக்கு துணைவேந்தர் பாராட்டு,பரிசு



மூதூர் பாடசாலைவிழாவில விஜயசீலன்உரை,அருகே பணிப்பாளர்:கனிபா,தேவகடாட்சம்

# தமிழர் கண்ட வாழ்வியல்.

டாக்டர்.லோகாம்பாள்.சுந்தரம்

திருமணம் என்பது இருமனங்களைச் சேர்ப்பதற்காக நம் முன்னோர்கள் கடைப்பிடித்த ஒரு சடங்கு முறையேயாகும். ஒருவனும் ஒருத்தியும் மனமொத்தபின் பலரும் காண இருவரும் ஓர் இல்லில் சேர்ந்து வாழ்வதற்கு, உற்றார் உறவினர்களைச் சாட்சியாக வைத்துக்கொண்டு செய்யப்பட்ட ஒரு சடங்கு தான் கரணம். அதுதான் பின்னர் பெயர் மாறி திருமணம் என்றாயிற்று. தமிழகத்தில் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற ஒரு வழக்கு உண்டு. இதையே 'காதல் போயின் சாதல்' என்று பிற்காலத்தில் மாற்றினார்களோ என்னவோ.

பண்டைத் தமிழர்கள் காதல் மணத்தையே பெரிதும் போற்றினார்கள். காதல் என்னும் உள்ளப் புணர்ச்சியின் அடிப்படையில் அமைந்த வாழ்வே நாகரீகமான வாழ்வாகும் என்று சிறப்பித்தார்கள். அத்தகு உள்ளப் பிணைப்பில் சாதி சமய இன பாகுபாடுகள் குறுக்காக நிற்கவில்லையென்பதையும் கூறவேண்டும். மலையில் வாழ்கின்ற தலைவன் நெய்தல் நிலத்தலைவியைக் காதலித்தான், கரம் பிடித்தான். இவ்வாறே ஏனைய திணையில் வாழ்பவர்களும் என்பதைப் பரவலாகப் பார்க்க முடிகிறது. ஆதலால் குறவன் குறத்தியைத் தான் மணந்து கொள்ளவேண்டும் அல்லது உழவன் உழத்தியைத் தான் கரம் பிடிக்க வேண்டும் என்பது போன்ற எழுதாத சமுதாயச் சட்டங்கள் பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் இருந்ததில்லை. சமுதாயத்தில் ஆண்பாலாரிடம் பொய்யும் வழுவும் புகுந்ததன் பின்பு தான் இருபாலாரின் இணைந்த வாழ்வுக்குக் கரணம் என்ற திருமணச் சடங்கு தேவையாயிற்று என்பதையும் நாம் பார்க்க முடிகிறது.

பெண்ணை ஆணுக்குக் கொடுத்தலாகிய 'பெண் கொடை' சிறந்ததாகப் போற்றப்பட்டது. பெண்ணைக் 'கொடுப்பதும்', பெண்ணைக் 'கொள்வதும்' ஆகிய நிலை தொல்காப்பியர் காலத்திலேயே இடம்பெற்றதைக் காணலாம். தொல்காப்பியர்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே"

(தொல்- பொருள்- கற்பு:1)

என்று பெண்தானத்தைப் பற்றிக் கூறியுள்ளார். 'பெண் எடுத்தேன்' என்று கூறாமல் 'பெண் கொண்டேன்' என்று தான் மரபு இருந்திருக்கிறது. வள்ளுவரும் கூட கணவனைக் குறிப்பிடும்போது "தற்கொண்டான்" என்று தான் கூறினார்.

சமுதாய அமைப்பில், கொடுப்பவர் மோலோர் கொள்பவர் கீழோர் என்பது தானே உண்மை. பெண்ணைக் கொடுப்பவர் எந்தவிதத்திலும் தாழ்ந்தவராகக் கருதப்பட்டிருக்கவில்லை. மேலும், பெண்ணைக் கொள்ளும் பொருட்டு தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து போனதாக 'பொருள்வழிப் பிரிவு' என்ற ஒரு பிரிவினையே இலக்கணங்கள் சுட்டுகின்றன. ஆகவே, பெண்ணுக்குப் பொருள் கொடுத்து ஆடவனோடு திருமணத்தால் சேர்த்தலாகிய இழிநிலை பழந்தமிழர்களிடையே இருந்ததில்லை. அதாவது தற்காலத்திலுள்ள 'வரதட்சணை' நிலை பழந்தமிழர் காணாத ஒன்றாகும். ஆனால், திருமணமாகிய பின்னர் தன்னைச் சேர்ந்தவளுக்கும் தன் மக்களுக்கும் தன்னைத் தேடி வருபவர்களுக்காகவும் பொருள் தேவையென்று கருதிய தலைவன், பொருள் தேடுதலை ஒரு முக்கிய பணியாகக் கடைப்பிடித்தான் என்று தான் பார்க்க முடிகிறது. அவ்வாறு பெண்ணை மட்டுமே கொண்ட தலைவன் பிறகு இல்லறத்தை இனிதே நடத்தினான் என்றும் பார்க்க முடிகிறது. இப்படி வாழ்நாள் முழுவதும் அவளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு, வேறு பொருளை அவளைச் சேர்ந்தவர்களிடமிருந்து எதிர்பாராமலிருந்ததன் அடிப்படைக் காரணம் யாதாயிருக்கும் என்பதையும் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

பண்டைத் தமிழர்கள் பெண்ணைக் கிடைத்தற்கரிய நிதியாகப் போற்றினார்கள். ஏனெனில், அக்கால மகளிர் அத்தகு நற்குணப் பெட்டகங்களாயிருந்தனர். பெண்களே இல்லறத்தைச் செம்மையாக போற்றி நடத்தியிருந்தனர் என்பதற்குப் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியமே சான்று பகர்கின்றது.

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"

(தொல் - பொருள் - கற்பு:11)

புறநானூற்றுப் புலவன் ஒருவன் தன் மனைவியை 'மாண்டவென் மனைவி' என்று பெருமையோடு குறிக்கின்றான். மாட்சிமை பொருந்திய மனைவி என்பது தான் அதன் விளக்கமாகும். மாட்சிமை என்றால் என்னென்ன பண்புகளைக் குறிக்கும் என்பதற்கு விடை காணவேண்டும். தொல்காப்பியர் அதனை விளக்கமாகவே கூறியுள்ளார்:

'பெற்றோர்களும், அறிவுடையோரும் கற்பித்த அறிவுரைகளைத் தமிழ்மகள் போற்றுதல் வேண்டுமாம். கணவனிடத்தில் உள்ளத்தமைந்த அன்பு காட்டவேண்டுமாம். நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து நடக்க வேண்டுமாம். எதிலுமே அடங்கிய நிலையில் பொறுமையைக் காட்டவேண்டுமாம். இரகசியங்களை மனதில் அடக்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றவளாக வாழ வேண்டுமாம். வந்த விருந்தினர்களைக் காக்கும் மனம் கொண்டவளாயிருக்க வேண்டுமாம். தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களையும் பாதுகாப்பதில் குறியாயிருக்க வேண்டுமாம்.'

இவையனைத்துமே தவறாமல் கடைப்பிடித்து இல்லறத்தில் சிறப்பவளே மாட்சிமை பொருந்திய மனைவியாவாள் என்பது தான் தொல்காப்பியர் கூறும் இலக்கணமாகும். இத்தகு நற்பண்புகளோடுள்ள மனைவியைப் பெற்றிடில், ஆடவனுக்குப் பிறகு வாழ்க்கையில் 'இல்லை' என்ற சொல்லுக்கே இடம் 'இல்லை' என்று சிறந்தான் என்று காணமுடிகிறது. ஓர் ஆடவனுடைய வாழ்வில் இத்தகு நற்பண்புகள் வாய்த்த ஒருவளைக் கரம் பற்றும் பேறு கிடைத்துவிட்டால் பின்னர் அவனே நிறைவான மனிதனாவான் என்பது தமிழர் கண்ட வாழ்வியலாகும்.

அத்தகு பெண் ஒருவனுக்கு மனைவியாக வாய்த்திடின், பிறகு இல்லற வாழ்வில் அவளே இல்லத்தை ஆளக் கூடியவள் ஆகிறாள் என்பதையே 'இல்லாள்' என்ற பெயர் சுட்டுகிறது. மனையில் மலர் போன்ற மென்மையுள்ளத்துடன் இருப்பவள் என்பதாலேயே 'மனைவி' என்றனர். மனைக்கு விளக்காக ஒளி தருபவள் அவளே. நடைமுறையில் 'இல்லான்' என்ற சொல் வழக்கில் இல்லை. 'இல்லாள்' தான் உள்ளாள். ஆகவே குடும்ப வாழ்வில், பெண்ணுக்கு முதன்மை அளிக்கப்பட்டிருந்தது தெள்ளென விளங்குகின்றது. அவள் பெற்ற முதன்மைக்குக் காரணங்கள் பலவென்பதைக் கருத்திற்கொண்டு தான் அவளுக்கென்று சில நற் பண்புகளைகளையும் வகுத்திருந்தனர் என்பதை உய்த்துணர வேண்டும்.

தற்காலத்தில் பெண்களுக்குப் பல நிலைகளிலும் சமமான இடங் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதே. ஆனால், அந்தப் பெண்கள் பண்டைத் தமிழ்மகளிரின் நற்பண்புகளைக் கொண்டவரா வென்பது கேள்விக்குரியதாகும். பெற்றோரையும் அறிவுடையோரையும் அறிந்தொழுகக் கூடிய நிலை ஒரு சிலரிடமே ஒட்டிக் கொண்டிருக்கிறது. "முதியோர் சொல்லும் முது நெல்லிக்கனியும் முன்பே கசக்கும். பின்பே இனிக்கும்" என்ற நெறியை அவர்கள் உணர்வதில்லை.

இன்னும் விரிவாகக் கூறுவதாயின், வயதானவர்களையே – அவர்கள் பெற்றோர் களாயினும் ஒதுக்கிவிடக் கூடிய நிலையைத் தான் இன்று காண முடிகிறது. பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்ற நிலையைத் தற்காலம் மிக வேகமாக ஏற்றுக்கொள்கிறது. பெற்றோர்கள் தம் வாழ்நாளில் நல்லனவற்றையெல்லாம் தம் பிள்ளைகளுக்கென்று அளித்துத் தியாகிகளாகி யிருந்தாலும், அவர்களுடைய வாழ்நாளின் கடைசி நாட்களில் தம்மால் தனித்து இயங்க முடியாதென்ற நிலையை உணரும் போது, பிள்ளைகள் அவர்களைத் தாங்கி நிற்கும் விழுதுகளாக வேண்டுமென்பதைத் தான் அவர்கள் எதிர்பார்ப்பார்கள். பிள்ளைகளும் அவ்வாறே இருக்க வேண்டும். ஆனால் தற்கால நாகரீக வாழ்வில் இந்நிலை அருகியே வருகின்றது. தம்மை ஆளாக்கியவர்கள் என்ற நன்றியுணர்வோ, தாமும் அவர்களைப் போல் இரங்கத்தக்க நிலைக்கு ஆளாவோம் என்ற எண்ணமோ இல்லாமல் அவர்களுக்கு ஆதரவு அளிக்காமல், தம் உதிரத் தொடர்பையே உதறுவது போல் நடந்து கொள்ளும் நிலையைத் தான் பெரும்பாலும் பார்க்க முடிகிறது. ஒரு சிலர் அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்து மாதாமாதம் பணம் கொடுப்பதோடு தம் கடமையைச் செய்து விட்டதாக ஒதுங்கிக் கொள்கின்றனர். இத்தகைய போக்குடையோர் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

வயதான காலத்தில் ஆதரவான பார்வையும் சொல்லும் அரவணைப்பும் கிடைக்காதாவென்று ஏங்கி நிற்கும் முதிய மனங்களைப் புரிந்துகொள்ளாமல், வேளைக்கு உணவும் ஏனைய தேவைகளும் நிறைவேற்றுவதற்கான பணத்தை மட்டும் கொடுத்து முதியோர்களைத் தனியே விடுவது முறையல்ல. தம்மோடு வைத்து மனத்தாலும் நிறைவு கொடுப்பதே மேலானதாகும். தாம் ஒதுக்கப்படவில்லை, புறக்கணிக்கப் படவில்லை என்ற எண்ணமே அவர்களுக்கு நிறைவினைக் கொடுக்கும் என்பது தான் பொதுவான கருத்தாகும். இத்தகு ஒரு பாசத்தொடர்பு நம் பிள்ளைகளின் காலத்தின் நம்மையும் ஒரு பொருட்டாக மதிப்பதற்கு வழி காட்டியதாகவும் ஆகும். முதியோர்களைப் பேணுதல் நம் கடமை என்று உணர்ந்து நாம் செயலாற்றினால் தான் நம் பிள்ளைகளும் அத்தகு மனோ நிலையை உணர்வார்கள்.

தற்கால உலகம் மிக மிக வேகமான உலகம்! அதில் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஏங்குகின்ற குடும்ப உறவுகளையே பார்க்க முடிகிறது. நாம் நம்முடைய உடல் உள்ளத் தேவைகளை நிறைவு செய்ய எவ்வாறு பொழுதும் பொருளும் ஒதுக்குகிறோமோ, அவ்வாறு நம்மைச் சார்ந்த முதியோர்களுக்காகவும் பொழுதும் பொருளும் ஒதுக்க வேண்டும்.

பெண்ணானவள் கணவனிடம் உண்மையான உள்ளன்பினைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்பது மற்றொரு எதிர்பார்ப்பாகவுள்ளது. இன்றைய சமூகத்தில் உள்ளப் பொருத்தத்தை விட மற்றப் பொருத்தங்களுக்கே முதன்மை யளித்து திருமணங்கள் நடைபெறு கின்றன. அதிலும் பொருள் வரவு தான் ஆடவன் மனதில் நிற்கின்றது. இதனால், பெண்ணின் மனம் சஞ்சலப்படுகிறாள். தன்னுடைய பெற்றோர் களிடமிருந்து பெரும் பொருளை வாங்கிய பின்னரே தன்னை தன் கணவன் ஏற்றுக்கொண்டானன்றோ என்ற எண்ணம் அவளை அவளுடைய கணவனிடம் உண்னையன்பைக் காட்டுவதற்குத் தடையாகவிருக்கிறது.

இந்நிலை மாறவேண்டுமாயின், ஆண்களே துணிய வேண்டும். வாழ்க்கைத் துணையான பெண்ணைப் பெறுவதற்கு தன்னையே விலை பேசி நிற்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அப்போது தான் பெண்ணின் முழுமையான அன்பினைப் பெறமுடியும் என்று ஆடவன் உணரவேண்டும். சுருங்கக் கூறின், பெண்ணை விலைப் பொருளாக மதிக்காமல் நற்பண்புகளுக்காகவே மதிக்கும் நிலை உருவாகவேண்டும்.

பெண்ணும் கணவனைப் பெரிதும் போற்றும் நிலையும் உருவாகவேண்டும்.

பெண்ணானவள் நல்லொழுக் கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று தான் வள்ளுவரும் கூறுகின்றார். பெண்மைக்குச் சிகரமாக அமைவது பொறுமை தான். இதனைப் பெண் தன் கருத்திற் கொண்டொழுக வேண்டும். எந்த ஒரு நிலையிலும் சிந்தனையற்ற வேகமான செயல்களில் ஈடுபடாமலும் உணர்ச்சி வயப்படாமலும் அணுகித் தீர்வு காணும் பொறுமை மிகுந்தவளாக வாழ்வது சிறப்பைத் தரும். தற்காலப் பெண்டிரிடம் இக்குணம் மழுங்கியே காணப்படுகிறது. சூழ்நிலைகளினால் இந்நிலை ஏற்படினும், அச் சூழ்நிலைகளுக்கு அடிமையாகாமலிருக்கப் பெண்கள் கருத்துடன் இயங்குவதே மேலானது. இரகசியங்களைப் பாதுகாக்கும் உறுதி பெண்களுக்கில்லையென்று சுவைக்குக் கூறுவார்கள். அந்நிலை வருந்துவதற்குரியதாகும். பெண்கள் இதனை மனதிற் கொள்ளவேண்டும். 'தனி மரம் தோப்பாகாது' என்பதை நினைவில் நிறுத்தி, சுற்றந் தழுவி வாழ்வது சங்ககாலப் பெண்களின் குணமாயிருக்க, விருந்து வந்தாலே முகம் கறுக்கும் நிலையில் இன்றைய குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. பொருளாதாரச் சிக்கலும் உடல் உழைப்பில் நாட்டமில்லாமையுமே இந்நிலைக்குக் காரணங்களாக இருப்பதென்றாலும், ஓரளவு மாற முயற்சி செய்யலாமன்றோ! இவ்வாறு பழைய பண்புகள் எல்லாமே இன்று மங்கிப் போயிருக்கின்ற நிலை கண்டு மனங் குமுறும் சூழலைத் தவிர்க்க முயற்சி செய்யவேண்டும். தமிழ் மக்கள் இவை குறித்துச் சற்றுச் செவி சாய்த்தல் அவசியமாகும்.

இவ்வாறெல்லாம் இல்லற வாழ்வினைச் சிறப்பாகக் கண்டு வாழ்ந்த மக்கள் முழுமையாக வாழ்ந்தார்களென்று பெருமையடைய வேண்டுமாயின், மற்றொரு ஒழுக்கத்தையும் மேற்கொள்ளவேண்டும் எனத் தொல்காப்பியரே கூறியுள்ளார். வாழ்க்கையில் இல்லற இன்பங்களை முழுக்கத் துய்த்தபின், வாழ்க்கையில் சலிப்பு ஒன்று ஏற்படக்கூடிய நாள் ஒன்று நிச்சயமாக வரும். அந்தக் காலத்தில் இல்லறத்தை விட்டுச் "சிறந்தது பயில" வேண்டும் என்று வேறு ஏதோ ஒரு வாழ்க்கை நெறிக்கு நம்மை ஆற்றுப்படுத்துகின்றார்.

துறவறம் என்பது உலகில் பல சமயத்தாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நெறி தான். ஆயினும் மனைவி மக்களை விட்டுவிட்டு, அல்லது அவ்வின்பங்களைத் துய்க்காமல் நேரிடையாகத் துறவறம் ஏற்றுக்கொள்வதென்பது தமிழர்களுக்கு ஏற்புடையதாகவில்லை. இல்லறத்தில் வாழ்ந்து கொண்டே ஆன்மீகமாகவும் செயற்படும் நிலை, தமிழ் மக்களிடம் தான் காணமுடிகிறது. துறவறத்தில் வாழ்பவருங் கூட இல்லறத்தானைப் பல நிலைகளில் உதவி எதிர்பார்க்கும் நிலையில் தமிழர் வாழ்ந்திருந்தனர்.

இல்லறவின்பம் அனுபவித்துச் சலிப்படைந்து, பின்னர் துறவறத்திற்குச் செல்லவேண்டும் என்பது தான் பழந்தமிழர் நெறியாக அமைந்திருக்கிறது. மனிதர் நல்லொழு க்கங்களைக் கடைப்பிடித்து, இனிய இல்லறம் துய்த்து, நன் மக்கட்பேறு கண்டு, பொருள் சேர்த்து, சுற்றம் தழுவி, உரிய காலத்தில் யாவர்க்கும் யாவையும் அளித்துவிட்டு, விட்டுக் கொடுத்து வாழ்க்கையின் முடிந்த முடிவாகச் செய்யவேண்டிய துறவு பற்றி தொல்காப்பியர் கூறுவதாவது:

" காமம் சான்ற கடைக் கோட்காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

( தொல்_ பொருள்_புற:51)

என்று நெறிப்படுத்துகின்றார். வாழ்க்கையின் தொடக்க காலங்களில் மனிதன் விரும்புகின்ற அத்தனையும் அடைந்து, அவ்வின்ப வாழ்க்கையிலேயே திளைத்திருந்தாலும் சமுதாய வாழ்க்கையின் குறிக்கோள்களை மனதிற் கொண்டவராகவே வாழ்ந்து சிறப்படைந்த பின்னர், தம் மக்கள் வாழ வேண்டிய காலம் வந்தது என்று உணரும் காலை, தாம் வேறொரு வழிக்கு வாழ்க்கை நெறியை வகுப்பதிலும் தமிழர் சோம்பியிருக்கவில்லை.

இல்லறத்திற்கு முதன்மை அளித்தவர்கள் தமிழர்கள். ஆயினும், அவ்வாழ்க்கை திகட்டிப் போகும் நாளில் அவைகளைத் துறந்து இல்லறத்தை விடவும் மேலான ஒரு வாழ்வினை வகுத்துக் கொள்வது தேவையென்பதைத் தொல்காப்பியர் குறிக்கும் போது, துறவு வாழ்க்கையைத் தான் அவ்வாறு 'சிறந்தது பயிற்றல்' என்றாரோவென்று கருதத் தோன்றுகிறது. அதாவது, 'இல்லறத்தை விடவும் சிறந்தது' என்று மட்டுமே கூறி அது எந்த வாழ்வு என்பதைச் சொல்லாமலே விட்டுவிட்டார்.

ஆகவே, அக_புற வாழ்வுக்கு இலக்கணம் வகுத்து உலக மக்களுக்கே அவர் தம் வாழ்க்கைக்கே இலக்கணம் வழங்கியிருப்பினும், இல்லறத்தை விடவும் மேலானது துறவறம் என்ற ஒரு முடிவு இழையோடியிருப்பதை உணர முடிகிறது. இங்கு தான் ஆன்மீக வாழ்க்கையின் முதல் துவங்குகிறது என்றும் கூறுவதில் தவறில்லை. உடல் சம்பந்தமான இந்த உலக வாழ்க்கைக்கே முதலிடம் அளிப்பவராயினும், அந்த வாழ்வானது சலிப்பு உண்டாகக் கூடிய நாள் நிச்சயமாக வரும் என்றும், அந்நாளில் மனிதன் ஆன்மீகத்தில் மனதைச் செலுத்தி, நிறைவடைந்து வாழ்ந்து முழு மனிதனாகச் செல்வதற்கு நெறிப் படுத்திக் கூறும்போது, பழந்தமிழர் வாழ்க்கை நெறியும் இதுதான் என்று ஏற்றுக்கொள்ள முடிகிறது. சுருங்கக் கூறின், தமிழர்களின் வாழ்க்கை மனம் இணைந்த வாழ்க்கையேயாகும். அது இல்லறமாயினும் சரி, துறவறமாயினும் சரி மன ஈடுபாடே முதலிடம் பெறுகிறது. ஆகவே தான் தமிழன் 'மனம் படைத்தவன்' என்று கூற முடிகிறது. மனம் படைத்தவனாதலாலேயே 'மனிதன்' என்று இனம் காணவும் முடிகிறது.

*******************

# தீபன் இம்போட்

பலசரக்குசாமான்கள், பல்வேறு அரிசிவகைகள்
எம்மிடம் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம்!
நோர்வேயின் பல பகுதியிலுள்ளோர்க்கும்
நோர்வேபொதி மூலம் சாமான்கள் அனுப்பலாம்!

வீடுமாறும்போது, புதியதளபாடம் வாங்கும்போது
வாகனம் வாடகைக்கு உண்டு! தொடர்புறுக!!
உரிமையாளர்: சி. சிவனேஸ்வரன், தொ.பே.: 22199389
சிக்குர்ட்ஸ் காத்தா. 6, 0650 ஒஸ்லோ

# Theepan Import

**All type of spices, various type of rice and other tasty Asian food items are available!**

**Please contact for parcel service**

**We can send it to anypart, soon!**

**Transporting furnitures , or Moving in Oslo? Call for vehicle!**

**Prop: S. Sivaneswaran, Tel. 22199389**
**Sigurdsgt 6, 0650 Oslo, Norway**




***Redaksjonen/ Koordinatorer:***
***Norge:*** T.Thileepan, Viji Siva/Oslo,M.Mahan/Bergen,Devi/Trondheim,K.Sivarajah/Tromsø,Mubarak Ali /Stavanger,M.Bastian/Kristiansand,M.S.Uthayamoorthy/Flekkefjord,Pon.Siva/Egersund,Kuganeriappan/Vardø, Kumar/Ålesund, I.T.Ravindran/Kiberg, Sureshkaran/Båtsfjord,Thavam/Brattvåg,Thevarajah/Kristiansund, Sundaralingam/Bærum, kiruba/Asker,Eliston/Nedenes,Sumathy/Nordfjordeid,Suthaseelan/Sandvika,

# றோலா ஆ.எஸ்

Logo gravering og merking
med topp moderne datastyrte
maskiner. sanablåsning på krystall,
firmagaver og premier.
Kontakt oss for et tilbud.

ROLA A.S

Tlf.67067130 Fax 67067131




Masteveien 3, 1481 Hagan

சின்னம்செதுக்குதல், அதிநவீன, கணனிகருவியால்
குறியிடல், கிறிஸ்ரலில் மணலூாதல், பரிசுகள்,
நிறுவனஅன்பளிப்புகள்! உடன்தொடர்புகொள்க!!
மாஸ்ரவயன்.3,1481 காகன் (ஒஸ்லோ-ஜோவிக்
வீதியில் (ஆர்வே.4) சித்தா தொழிற்பேட்டையில்)




Purusothamarajan/Gaupne,M.Manivannan/Drammen,K.Ramachandran,B.Raja/Fredrikstad,Sumathy/Nordfjoreid S.Mani/Tønsberg, Sarvendran/Stryn,Veeragathi/Frei,P.Maheswaran/Alta,Ravindradevi/Batnsfjørora,K.Kalanithi /Skodje,Ponnuthurai/Ålesund,Sivarajah,Vasanthan/Skårer,Kanagasingam/Kalvåg,,S.K.Rajah/Hammerfest,Gajendran/Gol,Manoharan,Baheerathan/Sørvær,Kiruba,Sothi/Ås,S.Ehamparam/Harstad,Jeevan/Levanger,

# VIVI MINIPRIS AS

## EKSOTISK MAT

**TOLLBUGT 12, 3044 DRAMMEN-NORWAY.**
**TELEFON / FAX: 00 47 32 83 00 68.**
**MOBIL / HANDPHONE : 00 47 91 16 66 90.**

***Vi ønsker alle våre kunder GOD JUL og ett GODT NYTT ÅR !***
***Det er en annerledes butikk med Eksotiske og Norske mat varer! Her kan De handle gode varer for et godt rimelig priser!***
***HER KAN DE BETALE MED BANKKORT !***

அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்!


எமது வர்த்தகநிலையத்தில் அன்றாடதேவைகளுக்கான சகலவித உணவுப்பொருட்களையும், தமிழ் ஹிந்தி வீடியோ சீ டி மற்றும் ஆடியோ பிரதிகளையும், சர்வதேச தொலை தொடர்புஅட்டைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொலைவில் இருக்கும் நோர்வே தமிழர்களுக்கு அஞ்சல்சேவை ஊடாக, தபால்கட்டளையுடன் பொருட்கள் அனுப்பிவைக்கப்படும்.

இங்கே வங்கி அட்டைகள்மூலம் பணம்செலுத்த முடியும்!

**2000** வது ஆண்டு வாழ்த்துக்களுடன் ***VIVI MINIPRIS, DRAMMEN***



***Finland:***R.Sivalingam,Sivaruban ***Sweden:***Nantan ***Denmark:***Velanai ponanna,V.K.Paramanathan,S.Yogendran
***England:***Nagendran,N.Balamurali,S.Kanagasundaram,T.Manoharan,Yoges.J.Raji C.,Aranga.Murugian/London
***France:***Prof.Sakthipuyal,Patkunarajah,Satchitanandan ***Germany:***Poopati,T.Buvanendran ***Swiss:***Jeyakanthan.V
***Netherland:***Easan,***Italy:***Selvamani,***Kuwait:***M.Gause,***S.Africa***SelvanPillai,***Burma:***Marimuttu ,***Brunei:***Krishna




***Malaysia:***K.Kanesan,Arun,V.Selvaraj/Kualalumpur,Rev.V.Devarajulu/Penang,***Thailand:***V.Nagarajah
***Singapore:***Krishnan ,Selvajothy ***Indonesia:***Santhrasekaran/ Medan, Mrs.Mani/ Jakartha,
***Canada:***S.Senthilathan,Mrs.Kanageswari.N.,S.Thiru,M.Mahindan ***Newzealand:***T.Thirunanthakumar,Baskaran
***India:***Dr.Tamilappan,Filmstar:Prashanth/Madras,N.R.Laksmanan/Hydrabad,Poet.Singaravelan/Trichy,Thanga.




Jeysakthivel/Erode,Ram Baskar/Mukundanur,Pugalenthi/Maisoor,Dr.Ilamkamban/Palani,S.G.Z. Khan/Tirupur
Vijayakumar/Putukottai, Ambikapaty/BJP, P.Arunagirinathan/MDMK, R.Ravi/Madurai
Veera.Madurakavi/Puthucheri,Rasamanikkam/Salem,P.Sathyanarayanan/Calcutta,Sundaresan,Ramanujam/Delhi
Prof.S.Ramamurty,AS.Visvanathan/Bangalore,Sam David/Velur,P.V.Tamilanpan/Kovai,Dr.Lokambal.S./Kerala

# சிற்றி-நகைமாளிகை

## புரு காத்தா.12, 0186 ஒஸ்லோ

## CITY JEWELLERY

## Brugata.12,0186 Oslo

## Tel /Fax: 22.172256

## அன்பான வாடிக்கையாளர்களே!

சிற்றி-நகைமாளிகை, 1.12.99 முதல், புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது. வருக! வருக!!
குழந்தைகள் முதல், நவநாகரீகநங்கையர் வரை கண்ணைப் பறிக்கும் தங்க நகைகள்!
புத்தம் புது டிசைன்களில் உத்தரவாதத்துடன்!!
சிங்கப்பூர், துபாய், லண்டன் போன்ற நாடுகளில் இருந்து தருவித்த 999 பொறித்த ஆபரணங்கள்!
நத்தார், மிலேனியப்புதுவருடம் முன்னிட்டு விசேட

..........**மலிவு விற்பனை!!!**

அட்டியல்கள், சங்கிலிகள், வளையல்கள், மூக்குமின்னிகள், காதணிகள் இன்னும் பற்பல!!!
திருமண, சாமர்த்தியசடங்குகட்கு விசேடதள்ளுபடிகள்!!! ஒஸ்லோ தவிர்ந்த நோர்வேயின் பிற நகரங்கட்கும் அனுப்பிவைக்கப்படும்.


***Russia:***Sukumar,Paraman/Moscow ,***KSA:***Prof. Masilamani***:Dubai:***Naseer ***Bahrain:***Abdul ,***Oman:***Kannan
***SriLanka:***Kamsananthy,Mahesan/Jaffna,Devakadadsam,Thamaraitivan/Trinco,Relanki Selvaraja, Ilancheliyan, Sokkello Shanmugam /Colombo,K.Sabaratnam,V.Kanthakumar/Batticaloa,Satchi/Vavuniya,Bala/Hatton,Antony Jeeva,Kanagaratnam/Kandy,Dr.Thavayogan/Matale,Ramesh/Kurunagal, Piriya/Mullaitivu,Amaradas/Kilinochi Valvai.Manoharan/Kalutara.,***USA:***Baskaran,***Australia:***Pavalam,Pathma,***Korea:***Rameer***Japan:S***atchi/***Fiji***:Satchi

*Editor/Co-ordinator/Policy maker:* N.S.Pirabu, B.Sc.,Dip.Jour.(U.K)
L.Hervigsv.69A, 3035 Drammen
Norway . Tel.Fx.00.47.32.813416

**Abonnement:90,-kr/år** **C-BLAD** **Postbanken,Giro:05320899453**

**SARVADESA TAMILER: NORGES TAMILSKBLAD ETBL:1994 1999-NR:7 nsp@c2i.net**







# POLITIHØGSKOLEN
## i Oslo og Bodø

**Vi ønsker motiverte søkere til grunnutdanningen ved Politihøgskolen.**

Her er de formelle kravene vi stiller til søkerne:

- Norsk statsborger.
- Generell studiekompetanse. Opptaksnemnda kan likevel godkjenne annen relevant utdanning og/eller yrkeserfaring, som gjør søkeren særlig kvalifisert til politiyrket.
- Ha den nødvendige modenhet og personlig skikkethet for tjeneste i politi- og lensmannsetaten.
- Ha tilfredstillende fysikk og må herunder gjennomgå og bestå en fysisk test.
- Ha god helse og tilfredsstille til en hver tid gjeldene helsekrav (bl.a. normalt fargesyn og synsstyrke uten korreksjon på begge øyne som ikke er dårligere enn 5/10, 6/12, 0,5).
- Plettfri vandel.
- Førerkort klasse B.
- Svømmeferdighet.
- Fylt 20 år det året de tas opp.

Det legges vekt på å sikre en bred rekruttering til Politihøgskolen, slik at politiet så langt som mulig gjenspeiler den norske befolkning, herunder innvandrermiljøer.
Utdanningen er 3-årig, og den er både teoretisk og praktisk. Utdanningen gir 60 vekttall, av disse er 40 vekttall godkjent i universitets- eller høgskolegrad.

Søknadsskjema og brosjyre får du på alle politistasjoner og lensmannskontorer. Søknadsdokumentene skal leveres samlet på nærmeste politistasjon eller lensmannskontor ved PERSONLIG FRAMMØTE,

**Søknadsfrist 4. desember 1999**

POLITIHØGSKOLEN

**POLITIHØGSKOLEN**

Grafisk Consult a.s





